விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 27 வியாழக்கிழமை (09.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# குற்றச்சாட்டுக்களை இராணுவம் ஏற்காது

## வெளிப்படையாக தெரிவித்தார் சந்திரிகா



(கொழும்பு)


கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் மற்றும் போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை இராணுவத்தினர் தாமாகவே முன்வந்து ஏற்று விசாரணை செய்வார்கள் என தான் ஒரு போதும் நம்பவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள மொழி அறிவு இல்லாதவர்கள் வருங்காலத்தில் புறக்கணிக்கப்படலாம்

## மொழி அறிவை பெறுங்கள் என முதலமைச்சர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)


இருமொழி பேசும் மக்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டுமானால் ஒருவர் மொழியை ஒருவர் கற்க வேண்டும் எனவே சிங்கள மொழியாற்றலை விருத்தி செய்யுங்கள் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை கலைமகள் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்றைய தினம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## ரவிக்கு எதிரான பிரேரணை இன்று



(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியினரால் முன் 24ஆம் பக்கம் பார்க்க....

## இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டதை பிரதமர் ஏற்பு!

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடையில் சிக்கி பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதாக முதன் முறையாக ஏற்றுக்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எனினும் யுத்தத்தில் இவ்வாறான சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற பிரதமருக்கான கேள்வி நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகனால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பதிலளித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று பிற்பகல் 1.30 அளவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

23ஆம் பக்கம் பார்க்க....

## 44 விசாரணைகள் பூர்த்தி - பிரதமர்



(கொழும்பு)

ஊழல்களை வெளியிடும் வேலைத்திட்டமும், சட்டத்திற்கு அமைவான நடவடிக்கைகளும் முனனெடுக்கப்படுவதாக பிரதமர் ரணில விக்கிரம 23ஆம் பக்கம் பார்க்க....

## அனைவருக்கும் சமமான சட்டம்; வலியுறுத்தி நேற்று போராட்டம்

(கொழும்பு)

சட்டத்தை எல்லோருக்கும் சமமாக அமல்படுத்தும் படி நீதிமன்றங்களை வலியுறுத்தும் அமைதி போராட்டமொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு உச்ச நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள நீதிச் சேவை ஆணைக்குழு முன்பாக நேற்று பகலில் இந்த போராட்டம் நடைபெற்றது. 24ஆம் பக்கம் பார்க்க....




## இரகசியமாக புதையல் தோண்டல்

(மன்னார்)

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகரிசல் கிராமத்தில் உள்ள காட்டுப்பகுதியில் ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட பழமை வாய்ந்த கப்பலேந்தி மாதா ஆலய கட்டிடத்தினுள் புதையல் தோண்டும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மன்னார் பொலிஸார் குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சென்று பார் 23ஆம் பக்கம் பார்க்க....

**தரம் - 5**
**புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...**

## மக்களை பாதுகாக்கவே இராணுவ முகாம்கள்

(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு எதிர்பாராத விதமாக பிரச்சினைகள் ஏற்படுமிடத்து, அதிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காகவே அங்கு இராணுவ முகாம்கள் அகற்றப்படாமல் உள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் 23ஆம் பக்கம் பார்க்க....



## தேவையற்ற குழப்பங்கள் வடக்கு அமர்வில் வேண்டாம்

### உறுப்பினர்களுக்கு சம்பந்தன் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமர்வுகளில் குழப்பங்களை ஏற்படுத்தினால் இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுமையாக பெறுவதில் சிக்கல்கள் 24ஆம் பக்கம் பார்க்க....



அமுல்
திறப்பு விழா

உயர்தர சைவ உணவகம்
அன்பர்களே! நண்பர்களே! வாடிக்கையாளர்களே!
அமுல் கிறீம் கவுஸின் இன்னுமொரு கிளை நிறுவனமான அமுல் உயர்தர சைவ உணவகம் இன்று 09.06.2016 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் 452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகின்றது. உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(4898)
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
அமுல் உயர்தர சைவ உணவகம்

## பசிலின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவை உச்ச நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. நிதிமோசடி விசாரணைப் 23ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஈரைந்து அகவைகள் இறையடி நிழலில்...

மண்ணுலகில்
08 . 05 . 1917



விண்ணுலகில்
09 . 06 . 2006

இறையடியாள்

# இன்னாசி அன்னம்மா

பிறப்பு வாழ்வு :- ஊர்காவற்றுறை கிழக்கு, ஊர்காவற்றுறை
இடம் பெயர்வு இறப்பு :- மாகியப்பிட்டி சண்டிலிப்பாய்

அல்லும் பகலும் அயராது உழைத்தீர்கள்
சொல்லாலும் செயலாலும் சிறப்புடன் வாழ்ந்தீர்கள்.

முப்பொழுதும் உங்களுக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
எப்பொழுதும் எங்களுக்காய் இறைவனிடம் மன்றாடுங்கள்.

திருமதி மா. ஞானம்மா (மகள்)
திரு. ஐ. மார்க்கண்டன் J.P (மருமகன்)
திருமதி ச. அக்கினேஸ் (தங்கை, நெழுக்குளம் வவுனியா)
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

"மதிபதி"
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(4894)

## ரூபாய் 6 ஆயிரம் அபராதம் விதிப்பு

(கரணவாய்)

சுகாதார விதிமுறைகளை மீறி குளிர்களியினை வான் ஒன்றில் விற்பனை செய்தவருக்கு 6 ஆயிரம் ரூபாய் அபராதம் பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விதீக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி சுகாதாரப் பரிசோதகர்களினால் பிடிக்கப்பட்ட மேற்படி நபர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போதே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (செ-5-60)

## இளைஞர் மீது குளவிக்கொட்டு



(கரணவாய்)

கருங்குளவித் தேன் எடுப்பதற்காக பொருத்தமற்ற பாதுகாப்பு கவசங்களுடன் மரத்தில் ஏறிய இளைஞர் ஒருவர் குளவிக் கொட்டிற்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை துன்னாலை வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிட்டிணபிள்ளை நகுலேஸ்வரன் (வயது 33) என்பவரே குளவிக் கொட்டுக்கு இலக்கானவராவார். (செ-5-60)


### ஏல விற்பனை

யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய பாடசாலை வளாகத்தில் 27.06.2016 அன்று காலை 11.00 மணிக்கு பாவித்த பழைய் தளபாடங்கள், ஏனைய பொருட்களுக்கான ஏல விற்பனை நடைபெறும் (4896)

– அதிபர்

### வேலையாட்கள் தேவை

புடைவை விற்பனை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் 2 பெண் வேலையாட்கள் தேவை

**நேரில் சமுகம் தரவும்**

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-4834)

### A/L - 2016
### தொழில்நுட்ப பிரிவு

விசேட மாலை நேர
மீட்டல் வினாவிடை வகுப்பு

SCI - Tec | BIO - Tec
ENG - Tec | ICT ஆகிய

பாடங்களுக்கு எமது வழமையான வளவாளர்களினால் திங்கள், வெள்ளி பி.ப 2.30 → 5.30 மணிவரை ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள D.M.I கல்விநிலையத்தில் நடைபெறும் (C-4845)

### தவறவிடப்பட்டுள்ளது

தாவடியைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் நலினகுமாரி என்பவரின் கைப்பை கடந்த வெள்ளிக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் தவறவிட்டுள்ளார். அக்கைப்பையில் தன்னியக்க கடன் அட்டை, அடையாள அட்டை. கைத்தொலைபேசி. மோட்டார் வாகன திறப்பு உள்ளிட்டன உள்ளன. கண்டெடுத்தவர்கள் வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுகொள்கிறார் (4897)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

## சரவணமுத்து பரம்சோதி

(இடைப்பிட்டி, காரைநகர்)

**தோற்றம்**
1951
07
29



**மறைவு**
2013
06
13

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
(வெங்கடேஸ்வரா)

(சி-4844)

## இலங்கையில் பத்து பேரில் ஒருவருக்கு மனநிலை பாதிப்பு - சுகாதார அமைச்சு

தேசிய மனநோய் விஞ்ஞான அறிக்கைக்கு அமைய இலங்கையில் பத்து பேரில் ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதில் சிகிச்சைப் பெறுவோர் நூறில் 20% என அமைச்சர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி, தற்கொலை செய்து கொள்வோர் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், இலங்கையில் நூற்றுக்கு 50 % மதுபானத்துக்கு அடிமையாகியுள்ளதாகவும், இதுவே மனநிலை பாதிப்பதற்கான பிரதான காரணம் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.


இதேவேளை, மனநிலை பாதிப்பு பிரச்சினையை குறைப்பது தொடர்பில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான சூழலை உருவாக்குவது கட்டாயம் எனவும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார். (இ-10)

## கசிப்புடன் பெண் கைது

(கரணவாய்)

துன்னாலை குடவத்தைப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை காலை நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குடவத்தைக்குச் சென்ற பொலிஸார் ஒரு போத்தல் கசிப்பினை மீட்டதுடன் அதனை வைத்திருந்த பெண் ஒருவரையும் கைது செய்தனர். (இ-5-60)



(கேலிச்சித்திரம்)

# சமஷ்டி போர்வையில் தனிநாடு அமைக்க சதி

## முன்னாள் அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடக்கு கிழக்கை இணைத்து, சமஷ்டி எனும் போர்வையில் தனி நாட்டை உருவாக்க நாடாளுமன்றில் சதித்திட்டம் தீட்டப் படுவதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல குற்றம் சாட்டியுள்ளார்.**

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்க் கட்சித் தலைவராக இருந்து கொண்டு, தெற்கில் நடக்கும் பிரச்சினைகள் குறித்து வாய் திறப்பதில் லையெனவும் தனிநாட்டு கொள்கையை தவிர அவர் வேறு எதனையும் பற்றி கதைப்பதில்லையென்றும் கெஹலிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தோடு, வட மாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென குறிப்பிட்ட கெஹலிய ரம்புக்வெல, அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக, ஆபத்தான விடயங்களை முன்னெடுத்து வருவதாக மேலும் தெரிவித்தார். (இ-10)

## சர்வதேச சமுத்திர தின நடைபவனி ஜனாதிபதி மைத்திரி தலைமையில்



சர்வதேச சமுத்திர தினத்தை முன்னிட்டு சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட நடைபவனி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பு விஹாரமகாதேவி திறந்த கலையரங்கில் ஆரம்பமானது.

சமுத்திர சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்குடன் "தூய்மையான சமுத்திரம் - ஆரோக்கியமான உலகம்" என்ற கருப்பொருளின்கீழ் சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையும் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல்துறை அமைச்சும் இணைந்து இந்த நடைபவனியை ஒழுங்கு செய்திருந் தன.

ஜனாதிபதி தலைமையில் விஹாரமகாதேவி திறந்த கலையரங்கின் அருகாமையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபவனி கொழும்பு காலி முகத்திடல் வரை இடம்பெற்றது. (இ-10)

## 25 பவுண் திருட்டு

யாழ்.சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு 25 பவுண்தங்க நகையும் 65 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது. இது குறித்து சாவகச்சேரி பொலிஸார் தீவிரவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த வீட்டில் சில மாதங்களுக்கு முன்னர் திருமண வைபவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## வீட்டுக்கடன் பெற்றவர்கள் ஆவணங்களை பெறலாம்

தேசியவீடமைப்புத்திணைக்களத்தினால் வீட்டு உறுதியை ஈடாக வைத்து கடன் பெற்று அக்கடனை மீள செலுத்திய பின்னர் இதுவரை தமது ஆவணங்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் இ.ரவீந்திரன் தெரிவிக்கையில்,

தேசியவீடமைப்புதிணைக்களத்தில் வீடமைப்புக் கடன் பெற்றுக்கொள்ளும் போது தமது வீட்டின் உறுதியை ஈடாக வைத்து கடன் பெற்றவர்களில் வீடமைப்புக்கடனை முற்றாகச் செலுத்திய பின்பும் இரத்துச் செய்யப்பட்ட ஈட்டுறுதி மற்றும் உறுதிகள் இதுவரையில் பெற்றுக்கொள்ளாதவர்களின் ஆவணங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் உள்ளது.

எனவே தற்போது அதனைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்கள் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு எதிரேயுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தொடர்ந்து நீடிக்கப்பட்ட பிள்ளையானின் மறியல்


முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்று அழைக்கப்படும் பிள்ளையானின் விளக்கமறியல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பிள்ளையான் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே மட்டக்களப்பு நீதவான் கணேசராஜா நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பிள்ளையான் முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தமிழ்ச் சமூகம் இப்போதுதான் பொதுநலத்தில் ஈடுபாடு காட்டுகிறது

## ஊக்கப்படுத்த வேண்டும் என முதலமைச்சர் உரை

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் சுயநலம் மிக்கதாகவே தன்னைக் காட்டி வந்த தமிழ்ச் சமூகமானது இப்பொழுதுதான் பொதுநலத்தில் ஈடுபாடு காட்டுகின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் தலைவர்கள் எங்களை மதிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நாம் முதலில் எம்மக்களை மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை கலைமகள் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்றைய தினம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று பல்வேறு இடர்களுக்கு மத்தியில் அல்லது தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற எம் உறவுகள்தாம் அந்த நாடுகளில் கடுமையான குளிரின் மத்தியில் உழைத்த பணத்தில் ஒரு பகுதியினைத்தாம் சார்ந்த கிராமத்தின் முன்னேற்றத்திற்காக, தமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக,தமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பல வழிகளில் செலவு செய்வதற்கு முன்வந்திருப்பது இங்கிருக்கும் எம் மக்கள் தனித்துவிடப்படவில்லை இவர்களை தாங்கிக் கொள்வதற்கு நம்மவர்கள் பல நாடுகளிலும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை இவ்வாறான நல்ல செயல்கள் மூலம் அவர்கள் தெரியப்படுத்தி வருகின்றார்கள். அந்தவகையில் தனி ஒருவரின் முயற்சியினால் 7 இலட்சம் ரூபாய் செலவில் இப்பாடசாலைக்கு சிலை ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

சிலர் இப்பேர்ப்பட்ட சிறிய காரியங்களிற்காக முதலமைச்சர் செல்ல வேண்டுமா? என்று கேட்கின்றார்கள். என் நேரத்தை வீணாக்குகின்றேன் என்று குறைபட்டுக் கொள்கின்றார்கள். இதில் என் கருத்தை நான் இங்கு கூறி விடுகின்றேன்.

எமது தமிழ்ச் சமூகமானது சுயநலம் மிக்கதாகவே இதுவரை காலமும் தன்னைக் காட்டி வந்துள்ளது. இப்பொழுதுதான் பொது நலத்தில் ஈடுபாடு காட்டுகின்றது எனலாம். எந்தச் சிறிய உதவியாக இருந்தாலும் அது பொதுநலம் மிக்கதாய் அமையும்போது முடிந்தளவு எமது ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நன்றியையும் வெளிக்காட்டுவது எமது கடமை என்று நினைக்கின்றேன்.

இதில் எவ்வளவு பணம் செலவழித்தார் என்பது முக்கியமல்ல. மற்றவர்களுக்காக ஒருவர் தன் பணத்தைச் செலவழிக்க முன் வந்துள்ளார் என்பதுதான் முக்கியம். மேலும் மேலும் எம்மக்கள் இவ்வாறு தமது உறவுகளுக்காக உதவி செய்ய முன்வருவதை ஊக்கப்படுத்துவது எமது தலையாய கடமை என்று நான் நினைக்கின்றேன்.

என் சிரமத்தைப் பாராது இந்நிகழ்சிகளில் கலந்து கொடையாளிகளைப் பாராட்டுவது எம்மக்களுக்கான எனது சிறு உதவியாகும். மனிதாபிமானம் மதிக்கப்பட வேண்டும். நாம் சிங்கள மக்கள தலைவர்கள் எங்களை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். முதலில் எம்மக்களை மதிக்க நாம் கற்றுக் கொள்வோம். சிறு செயற்றிட்டமானாலும் அது பெருமனதைப் பிரதிபலிப்பதால் அது மதிக்கப்பட வேண்டும்.

இன்று மாணவர்கள் மத்தியில் ஒழுக்க நெறிகள் சற்றுகுறைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.மாணவர்களுக்கு சிறு வயதில் இருந்தே சமய அடிப்படையிலான ஒழுக்கத்துடன் கூடிய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

இந்து மாணவர்கள் முதலில் சரஸ்வதி கடாட்சத்தைப் பெற்று அதன் பின்னரே தமது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருக்கின்றனர். இவ்வாறு தினமும் இந்த நிகழ்வு தொடர்கின்ற போது இம் மாணவர்கள் மத்தியில் சமய நம்பிக்கை, ஒழுக்கசீலர்களாக வாழ வேண்டும் என்ற அவா, மற்றவர்களை மதிக்கின்ற, கனம் பண்ணுகின்ற விசேட தன்மைகள் ஒருங்கே கிடைக்கப் பெறுவதுடன் கல்வியில் உயரவும் இந் நிகழ்வு வழி சமைக்கும்.

சமய வாழ்க்கை என்பது ஆணவம் தவிர்ந்த வாழ்க்கை. இறைவன் இருக்கின்றான் என்பது எமது மனதில் படிந்து விட்டால் ஆணவம் தானாகவே எம்மை விட்டு நீங்கி விடும். தன்னம்பிக்கை வேறு ஆணவம் வேறு. இறைபக்தியுடன் சேர்ந்த தன்னம்பிக்கை எமக்கு வேண்டும். தன்னையே முதன்மைப்படுத்தும் ஆணவம் அழிய வேண்டும். அது நடந்தால் எமது சமூகம் மாறிவிடும். ஒழுக்கம் தானாக வேரூன்றத் தொடங்கிவிடும்.

வாய்ப்பாடு மனனம் செய்தல் மற்றும் இலக்கங்களுடன் கூடுதலான ஈடுபாடுகளை அல்லது பயன்படுத்தல்களைக் கைக்கொள்பவர்கள் கணித பாடத்தில் கைதேர்ந்தவர்களாக விளங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பாடு மனனம் செய்வதன் மூலம் கணித்தல்களை செம்மையாகவும் விரைவாகவும் ஆற்றமுடியும்.

ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்பதை நாம் மறத்தல் ஆகாது. எமது பல்கலைக்கழக மாணவர்களில் பலர் எதுவித குறிக்கோளோ எதிர்கால மேம்பாட்டிற்கான நோக்கமோ இன்றி பல்கலைக்கழக புகுமுக தேர்வு பரீட்சைகளில் காணப்படும் இலகுவான பாடங்களை தேர்ந்தெடுத்து அவற்றில் திறமைச் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழக கற்கை நெறிகளையும் நிறைவு செய்த பின்னர் தான் அவர்களுக்குப் புரிகின்றது தாம் தெரிவு செய்த பாடநெறிகள் தமது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவ முடியாதவை என்று.

எனவே ஆரம்பப் பாடசாலைப் பொழுதில் இருந்தே குழந்தைகள் தமது வருங்காலம் பற்றிச் சிந்திக்கத் தொடங்க வேண்டும். மாணவர்கள் க.பொ.த.சாதாரண தர நிலைகளில் கல்வி கற்கின்ற போதே தமது எதிர்காலம் பற்றிய ஒரு தூர நோக்கு சிந்தனையுடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-7-9)

## முத்தரப்பு ஒருநாள் தொடர்

### தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது ஆஸி



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலி யாவை 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வீழ்த்தியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா-தெனனாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னா பிரிக்க அணி முதலில் துடப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. தென்னாபிரிக்க அணியில் அதிகபட்சமாக பெகார்டியன் 62 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய பந்து வீச்சில் ஹேசல்வுட், கோல்டர் நைல், மேக்ஸ்வெல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதனையடுத்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 34.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியை சந்தித்தது.

அவுஸ்திரேலிய அணியில் பிஞ்ச் 72, லியான் 30 ஓட்டங்கள் எடுக்க. 8 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

இதனால் அவுஸ்திரேலியா 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

ஆட்டநாயகனாக 62 ஓட்டங்கள் எடுத்த பெகார்டியன் தேர்வு செய்யப்பட்டார். (க)

## மரண அறிவித்தல்

### Dr.பொன்னையா சிவநேசன்

கரந்தன் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.பொன்னையா சிவநேசன் கடந்த 01.06.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வசந்தியின் அன்புக் கணவரும், சஜீவ், ராஜீவ், தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கரந்தன் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா (மலாயன் பென்சனியர்) - அன்னலட்சுமி தம்பதிகளின் புத்திரனும், தாவடி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும், றதிமதி, சந்திரவதனி, பத்மினி, கணேசன், ராசநேசன், காலஞ்சென்ற குகநேசன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமதாஸ் மற்றும் குமாரசாமி, அற்புதராசா, ராணி, மாலினி, சிவநேசன், சிவபாலன், சிவநாதன், சுகந்தி, றஜனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ILLINOIS, USA இல் நடைபெறும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

155, 157 Sea Street,
Colombo - 11.
T.P: 011 250 4732

தகவல்:
சுகந்தி சிவப்பிரகாசம்
(கொழும்பு)

(4900)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வடமாகாண நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு
Northern Province
Water Resources Development Colloquium
2016

ஆய்வுக் கட்டுரைகளுக்கான அழைப்பு

2016.05.01 ஆம் திகதியன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி ஆய்வுக்கட்டுரைகளிற்கான அழைப்பு தொடர்பான அறிவுறுத்தலில் ஆய்வுச்சுருக்கங்களை 2016.06.01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் தற்போது இம் முடிவுத் திகதியானது 2016.06.28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைச் சுருக்கங்களை சமர்ப்பிப்பது தொடர்பான பூரண விபரங்களைப் பெற ஆர்வமுடையோர் வடமாகாண சபை இணையத்தளத்தில் (www.np.gov.lk) விவசாய அமைச்சின் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு தொடர்பான அறிவுறுத்தல்களைப் பார்வையிடுவதன் மூலமாக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

(சி-4847)

செயலாளர்
விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## கந்தையா சாமி

-கே.எஸ்.அம்பாள்
மினிபஸ் உரிமையாளர்-

பிறப்பு
11◆01◆1934

இறப்பு
09◆06◆2009




உயிருக்கு உயிராய் எம்
உள்ளத்தில் நிறைந்து நின்றீர்
எம் வாழ்வை உயர்த்திடவே
அயராது உழைத்து நின்றீர்
அன்புக்கு
அணையா ஒளி விளக்காய்
பண்புக்கு பார் தூக்கும் கோவிலாய்
உண்மைக்கு ஒன்றே ஒன்று கடவுளாய்
எல்லாமாய் இருந்து விட்டு
எங்கு சென்றீர் எமை விட்டு
ஆண்டுகள் ஏழல்ல
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உம் நினைவுகள்
என்றும் எம்மில் நிறைந்திருக்கும்

உங்கள் பிரிவால்
துயருறும்
(சாமி குடும்பம்)

1/5, பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(4878)



யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட கலைமகள் திருவுருவச் சிலையை வடமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று திறந்து வைத்தார். கல்லூரி அதிபர் பே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் கலைமகள் திருவுருவச் சிலையைநிர்மாணிப்பதற்கு நிதியுதவி வழங்கிய பழைய மாணவர் தம்பித்துரை புவிராஜ் சிலையை வடிவமைத்து சிற்பிகள் மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோர் முதலமைச்சர் மற்றும் பாடசாலை அதிபரால் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்வி பணிப்பாளர், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கு. கஜரூபன்)

## தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் மாநாடு நாளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் மாநாடு நாளையும் நாளை மறுதினமும் யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறும். தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்வதுடன் கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## கிராம செயலகம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

2015 ஆம் ஆண்டு கிராம 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் நீர்வேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் கிராம செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச் செயலகத்தில் கிராம அலுவலர் அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம், சமுர்த்தி அலுவலர் அலுவலகம், குடும்பநல உத்தியோகத்தர் அலுவலகம் என்பன இயங்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுக் கூட்டங்கள் கூடக் கூடியதாக பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நீண்டநாள் முயற்சியின் பலனாக இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அலுவலர்களையும் தேடி ஒவ்வோர் இடமாகச் சென்ற இப்பகுதி மக்கள் ஒரே கூரையின் கீழ் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அமைந்ததில் திருப்தியடையவுள்ளனர்.

இம்மண்டபம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் த.பரராசசிங்கத்தின் தலைமையில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

# ரி.ஐ.டி.கைது நடவடிக்கையினை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது

## மனித உரிமை ஆணைக்குழு அறிவிப்பு

பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் (ரி.ஐ.டி) இடம்பெறும் கைதுகளை மனிதவுரிமை ஆணைக்குழுவினால் தடுக்க முடியாது என தெரிவித்துள்ள மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ், குறித்த கைதுகள் சட்டரீதியான கைதுகளாக இடம்பெறுகின்றனவா? என்பது தொடர்பில் தம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் தற்போது கொழும்பு நாலாம் மாடியிலும், பூசாவிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே முறையாக கைது செய்யப்படவில்லை.

சிலர் கடத்தல் பாணியிலும் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த கைதுகள் தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணத்திலும் மற்றும் ஏனைய இடங்களிலும் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் கைதுகள் இடம்பெற்று வந்தன.

இந்த கைதுகளை மனிதவுரிமை ஆணைக்குழுவினால் தடுக்க முடியாது. இவை சட்டரீதியாக இடம்பெறுகின்றனவா? என்பது தொடர்பிலேயே ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்க முடியும். கைது செய்யப்படுபவர்கள் துன்புறுத்தல்கள், சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் இதுவரை பயங்கர வாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் சித்திரவதைகள் இடம்பெற்றதாக எந்த முறைப் பாடுகளும் எமது காரியாலயத்தில் கிடைக்கவில்லை. கிடைக்கப் பெற்றால் அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சத்திரவதைகள் தொடர்பிலேயே மனிதவுரிமை ஆணைக்குழு கூடிய கவனம் செலுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-4)




## மாணவி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் மே 31 ஆம் திகதி புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் நடத்தப்பட்டது.

இதன் போது கோப்பாய் கோட்டத்தில் 2015 க.பொ.த.உயர்தர பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த இடைக்காடு மகா வித்தியாலய மாணவி குணபாலசிங்கம்-நிதர்சனா யாழ்.மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல் இடத்தைப் பெற்றமைக்காக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரரா



ஜாவால் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (இ-5)

# கலாசார உடை அணிந்து ஆலயத்திற்கு வாருங்கள்

## நயினாதீவு அறங்காவலர் சபை அறிவிப்பு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் ஆலய அறங்காவலர் சபையின் வேண்டுகோளுக்கிணங்க நடந்து கொள்ள வேண்டுமென நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

ஆலயத்திற்கு வருகை தருகின்ற ஆண்கள் வேட்டியுடனும் பெண்கள் அனைவரும் கலாசார உடை அணிந்தும் ஆலயத்திற்கு வரவேண்டும்.

பெண்கள் தமக்குரிய கலாசார உடைகளை மட்டும் அணிதல் வேண்டும். குறிப்பாக பெண்கள் தலைமுடி தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது தலை முடியை விரித்து விட்டு ஆலயத்திற்கு வருதல் முற்று முழுதாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பெண்கள் அட்டாங்க நமஸ்காரமோ அங்கப்பிரதட்சணமோ செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆலய உயர் திரு விழாக்காலங்களில் ஆலய உள்வீதியில் நெருக்கமாக பக்தர்கள் வழிபாடு செய்வதால் உள் வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்வோருக்கான அனுமதி தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆலய பெருந் திருவிழாக்களில் அடியவர்கள் குறிப்பாக பெண்கள் அதிகமான தங்க நகைகளை அணிந்து கொண்டு ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் புகைப்படங்கள், வீடியோக்கள் என்பன முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தூக்குக் காவடிகள் எடுக்கும் அடியவர்கள் ஆலய வளாகத்துள் வந்ததும் ஒலிபெருக்கி சத்தங்களை நிறுத்தி விட வேண்டும் என ஆலய அறங்காவலர் சபையினர் விதிமுறைகளை அறிவித்துள்ளனர். (இ-5)

## புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேசத்திற்கு உட்பட கற்கோவளம் ஜே/ 406 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கிராம மக்களுக்கு (SDC)நிறுவன நிதி அனுசரணையோடு சொண்ட் நிறுவனத்தினால் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கிராம மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வுகருத்தரங்குஇடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கு கற்கோவளத்தில் உள்ள பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-91)

## வேலையாள் தேவை

எமது இல்லத்திரனியல் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள் தேவை. கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயது 18-25 வரை ஆண்கள் மட்டும். ஆரம்ப மாத வேதனமாக ரூபா.14000 வழங்கப்படும்.

- தொடர்புகளுக்கு: ***கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்***

இல.11.A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 3857

## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

## கலைமாமணி Dr.S.S. சர்மா குருஜீ

**076 725 6024** (C-4662)

நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

விளம்பரத் தொடர்புகளுக்கு
Valampuriiadd@sltnet.lk
0212217603
0213210815
0215671532

உ
ஓம் சக்தி

## வெட்டுக்குளப் புவனேசுவரியாளைப் பணிகிறேன்!



கருணைமழை பொழிகின்ற கடைக்கண்ணின் பார்வையினாற்
கவலைகளைப் பொடியாக்கும் பூதலத்து- நாயகியைத்
திருவோடு மதிதந்து கலைதந்து புகழ்தந்து
நலமோடு பலம்நல்கும் புவனேசு- வரியாளைக்
கரும்பான தமிழாலே கவிபாடித் தொழுவோர்க்குக்
கதியாகிக் கணமேனும் மறவாரைக்- காப்பவளை
எருதேறும் சிவனாரின் இடப்பாகம் அமர்ந்தாளை
அரியாலை வெட்டுக்குளத் தாயாளைப்-பணிகின்றேன்!

ஆக்கம்: சின்னையா சிவபாலன்

(4895)

(அரியாலைப் பதியின், பேரருட் பொலிவுமிக்க வெட்டுக்குளம் புவனேசுவரியாள் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான பெருந்திருவிழாவிற் , கொடியேற்ற நாள் 09.06.2016 ஆகிய இன்றாகும். அதை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது)

உ
சிவமயம்



# விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர் !

சுபமங்களம் நிறைந்த துர்முகி வருடம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (09.06.2016) வியாழக்கிழமை பஞ்சமித் திதியும், பூச நட்சத்திரமும், வியாதீபாத யோகமும், கௌலவ கரணமும், அமிர்த்சித்த யோகமும், கடக லக்கினமும், சுக்கிரவோரையும் குருவருளும் திருவருளும் கூடிய காலை 8.45 தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

சிவஸ்ரீ சுப்பையாக் குருக்களின் பூட்டனும்
சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் பேரனும்
சிவஸ்ரீ சண்முகரெத்தினக் குருக்களின்
சிரேஷ்ட புத்திரனுமாகிய

## சிவஸ்ரீ பிரசன்னன் குருக்கள்

அவர்களுக்கும்



சிவஸ்ரீ கந்தையாக் குருக்களின் பூட்டியும்
சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களின் பேர்த்தியும்
சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்களின்
கனிஸ்ட புத்திரியுமாகிய

## சங்கீர்த்தனி

அவர்களுக்கும்

வேதவேதாரணிய சுவேதவனப் பெருமானின் திருவருளுடனும் ஆதிவேதாரணிய குருபரம்பரையும் பரம்பரைத் தெய்வமாகிய திருகோணமலை ஆலடிப் பிள்ளையாரினதும் அருள்மிகு ஸ்ரீமாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானினதும் திருவருளும் குருவருளும் நிறைந்த அருளாசியுடன் தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் தங்காலய வீதியில் அமைந்துள்ள **"இத்திநின்றபிலவு"** என்ற எமது இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழ பெரியோர்கள் நிச்சயித் திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

சிவஸ்ரீ சன்முகரெத்தினக் குருக்கள்
அருளரசி அம்மா தம்பதியினர்
பிரதமகுரு திருக்கோணேஸ்வரம் ஆலயம்,
திருகோணமலை.
தொ.பே : 0777574477

வரவேற்பு உபசாரம் 11.06.2016 சனிக்கிழமை
மணமகன் இல்லத்தில் நடைபெறும்

(இரு வீட்டார் அழைப்பு)

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
புவனேஸ்வரி அம்மா தம்பதியினர்
தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன்
தேவஸ்தான ஆதீனகர்த்தா
நெல்லண்டை, தும்பளை.
தொ.பே : 0776202716, 0776383314

(C-4828)

# இராசி பலன்

09.06.2016
வைகாசி 27, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 3.29 மணிவரை
பூசம் முற்பகல் 11.45 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
அமிர்தசித்தம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம், உத்தராடம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்**: சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், சுப செலவுகள் கூடும்.

**இடபம்**: உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மிதுனம்**: நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**கடகம்**: வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: தேவையற்ற மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், சுப செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி**: இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், விருந்தினரை வரவேற்று வியப்படைவீர்கள், செல்வநிலை உயரும் நாள்.

**துலாம்**: எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும் நாள், பொருட்சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**தனுசு**: தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று கூடும், கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

**மகரம்**: நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்**: தேகாரோக்கியம் சீராகும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்**: தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தடைபட்ட காரியங்களில் முன்னேற்றம் உருவாகும்.

# கழிவுநீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகும் அறிகுறி



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அருகில் கழிவு நீர் தேங்கியுள்ளதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக இவ்விடத்தில் கழிவு நீர் தேங்கியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட பலருக்கு தகவல் வழங்கிய போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவு நீர் தேங்கியுள்ள இடத்தில் போத்தல் மற்றும் பழைய பொருட்கள் வீசப்பட்டுள்ளன. இதனால் சுகாதார சீர்கேடு மட்டுமன்றி டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடமாகவும் காணப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி கவனமெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பெற்றோர் தெரிவித்துள்ளனர். (2-250)

# 2 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா நிதியில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 240 குடும்பங்களுக்கு உலருணவு

(மல்லாவி)

**நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வெள்ள அனர்த்தத்தில் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 240 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு ஒருவார காலத்துக்குரிய உலர் உணவுப்பொருட்கள் அனர்த்த முகாமைத்துவத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற 2 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா நிதியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளில் 240 குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குடும்பங்களில் மூன்று குடும்பங்களின் வீடுகள் சுழல் காற்றினால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவர்களுக்கு உடனடி நிவாரணமாக கூரை விரிப்புக்கள் (தறப்பாள்கள்), உலர் உணவுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய 240 குடும்பங்களுக்கும் ஒரு வார காலத்திற்கான உலர் உணவுப்பொருட்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற 2 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா பணத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# நந்திக்கடல் நாயாறை ஆழமாக்குவதன் மூலம் கடற்றொழில் வளம்பெறும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவின் நந்திக்கடல், நாயாறு என்பவற்றை ஆழமாக்கித் தருமாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையினால் பெருமளவு கழிவுப் பொருட்கள் நந்திக் கடலிலும் நாயாறிலும் நிறைந்துள்ளன. இதனால் இறால், மீன் பெருக்கம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நந்திக்கடலினையும் நாயாறினையும் ஆழமாக்குவதன் மூலம் கடற்றொழிலாளர்களின் தொழில் வளம் அதிகரித்து வாழ்வாதாரம் பலம் பெறுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆழமாக்குதல் தொடர்பாக கடற்றொழிலாளர்கள் பிரதிநிதிகளினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

நந்திக்கடல், நாயாறு என்பவற்றின் வழியாக கடந்த டிசெம்பர் மாதத்திலும் தற்போது பெய்த அடைமழையினாலும் பெருமளவு வெள்ளம் பெருங்கடலை அடைந்ததன் காரணமாக இறால், மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்கூட்டம் 25 ஆம் திகதி

(பனிக்கன்குளம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி கூட்டப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சுமார் மூன்றரை மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கூட்டப்படவில்லையென தெரிவித்து அதனை கூட்டுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிற்கு அண்மையில் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே எதிர்வரும் 25 ஆம் திகதி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அதில் அரசாங்கத்தின் செயற்பாடுகள், காணி சுவீகரிப்பு மற்றும் ஜெனிவாக் கூட்டத் தொடரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு அணுகுவது என்பன தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (2-281)

# நான்கு கூட்டுறவுச் சங்கங்களில் தெரிவு செய்யப்பட்ட முப்பது பயனாளிகளுக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு



முல்லைத்தீவிலுள்ள நான்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட முப்பது பயனாளிகளுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனினால் வாழ்வாதார ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்தே மேற்படி ஊக்குவிப்பு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஐந்து பனைதென்னைவள சங்கங்களுக்கு கடந்தாண்டு தனது ஒதுக்கீட்டில் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஐந்து இலட்சம் ரூபாவை வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் வழங்கியிருந்தார். •

அதன் தொடர்ச்சியாக இந்தாண்டின் ஒதுக்கீட்டிலும் முல்லை கிழக்கு, முல்லை மேற்கு, சங்கங்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதமும் சங்கங்களின் சமாசத்திற்கு இணையத்திற்கு ஒரு இலட்சமும் வழங்கினார். அத்தோடு பதிவு செய்யப்பட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கம் (கரையோரப்பகுதி) இவர்களின் அத்தியாவசிய வாழ்வாதார உதவியாக ஒரு இலட்சம் ரூபாயினையும் வழங்கினார். இதன் போது அவர் உரையில் தெரிவித்ததாவது,

உதவிகளைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும். இன்று இப்பயனைப் பெறும் உங்களுடைய முன்னுதாரணம் தான் இதன் பின் பயனைப் பெறுபவர்க ளையும் உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்ல உதவியாக இருக்கும் என்றார். (2)

# சிரமதானப் பணி செய்தல் தொடர்பான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் மேற்கு, வடக்கு மற்றும் சிவநகர் கிராமங்களைச் சேர்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒருங்கிணைந்து சிரமதான நடவடிக்கை செய்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை மேற்கு கிராம அலுவலர் தலைமையில் நேற்று முன்தினம் நடத்தினர்.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமை உருத்திரபுரம் கூழாவடி பேருந்து தரிப்பிடம், சந்தை சுற்றாடல் துப்புரவு செய்யும் பணி நடைபெறவுள்ளது.

இதன்போது பொதுமக்கள் மற்றும் கிராமங்களின் குறைபாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொள்ளப்படவுள்ளது.

எனவே அனைத்துப் பொதுமக்களையும் தவறாது பங்குபற்றுமாறு இப்பகுதிகளின் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)



*கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலய மாணவிகள் 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ்மொழித்திறன் குழுநடனப்போட்டியில் கோட்ட ரீதியில் முதலிடத்தையும் வலய மட்டத்தில் முதலிடத்தையும் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வருடாவருடம வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் தமிழ்த்தினப்போட்டி இம்முறை கடந்த 5 ஆம் திகதி கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலய மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சோலைநகர் செய்தியாளர்)*

# ‘அயல் பாடசாலை சிறந்த பாடசாலை’ தேசிய நிகழ்ச்சித் திட்டம் கிளிநொச்சியில்

## 15 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்

(மல்லாவி)

மத்திய அரசின் வேலைத்திட்டத்திற்கமைவாக “அயல் பாடசாலை சிறந்த பாடசாலை” எனும் நிகழ்ச்சித்திட்டம் தேசிய நிகழ்ச்சித் திட்டமாக எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக் கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் காலை 9 மணிக்கு கிளி/ பரந்தன் இந்து மகா வித்தி யாலயத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த திட்டம் ஏ,பி,சி,டி என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஏ நிகழ்ச்சித் திட்டத்திற்கு 246 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டு, அதில் 7 பாடசாலைகள் உள்வாங் கப்பட்டுள்ளன.

பி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 128 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 10 பாட சாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 5.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 5 பாட சாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

டி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 40 பாடசாலை கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பாட சாலைக்கும் 0.28 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சியிலும் மறு நாள் வியாழக்கிழமை முல்லைத்தீவிலும் எதிர்வரும்17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னாரிலும் நடைபெறும்.

இந் நிகழ்வில் மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் கல்வி உயர் அதிகாரி கள், ஆசிரியர்கள், அரசியல் வாதிகள், அமைச் சர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-15)




# வேப்பமரம் பாறி வீழ்ந்ததில் வீடு முற்றாக சேதமடைந்தது

## பெண்ணொருவருக்கு தலையில் படுகாயம்



சுமார்200 வருடங்கள் பழைமை வாய்ந்த வேப்ப மரம் ஒன்று திடீர் என வீசிய கடும் காற்றையடுத்து பாறி வீடொன்றின் மேல் விழுந்ததில் வீடு முற்றாக சேதமடைந்ததுடன் குடும்பப் பெண்ணொருவர் தலையில் படு காயம் அடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் வீட்டின் உரிமையாளரான வடிவேல் சிவகாமி (வயது-72) என்ற குடும்பப் பெண்ணே தலையில் படுகாயம் அடைந்தவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியோரமாக நின்ற வேப்ப மரமொன்று வீசிய காற்றினை அடுத்து வீடொன்றின் மேல் பாறி வீழ்ந்தது.

இதனையடுத்து வீடு முற்றாக சேதமடைந் ததுடன் வீட்டினுள் இருந்த குடும்பப் பெண் தலையில் படுகாயம் அடைந்தார். இதேவேளை சம்பவம் இடம் பெற்ற சமயம் வீட்டினுள் இருந்த இரு பிள்ளைகளும் எதுவித காயமும் இன்றி தப்பினர்.அத்துடன் குறித்த கல்லூரியில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் சிலரது துவிச்சக்கர வண்டியும் சேதமடைந்தது.

மரம் பாறி விழுந்ததில் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்ததில் சில மணி நேரம் அப்பகுதி முழுவதும் மின்சாரம் தடைப்பட்டு இருந்தது.

தொலைத் தொடர்பு வயர்கள் அறுந்து விழுந்ததில் தொலைபேசி அழைப்புக்களும் துண்டிக்கப்பட்டன. (2-310-281)

# துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு




தாயகத்தில் உள்ள மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மன் கைல்புறோன் கந்தசாமி கோவில் பல உதவிகளை வழங்கி வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியை தொடர முடியாமல் உள்ள மாணவர்களுக்கு தேவை யான கற்றல் உபகரணங்கள், பாடசாலை களுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் என்பனவற்றை கைல்புறோன் கந்தசாமி கோவில் வழங்கி வருகின்றது.

பாடசாலை செல்வதற்கு இலகுவாக வறுமைக்கோட்டுக்கு கீழ் இருக்கும் மாண வனுக்கு துவிச்சக்கர வண்டியை வழங்கி யுள்ளனர்.

இதற்கான நிதி உதவியினை அஞ்சலி யோன் தனது பிறந்த நாளை முன்னிட்டு கைல்புறோன் கந்தசாமி கோவில் ஊடாக வழங்கியுள்ளார். வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் துணைத்தவிசாளர் ச.சஜீவன் ஊடாக குறித்த மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (இ-2)

# யுத்தத்தை அடுத்து ஆயிரத்து 539 பேர் மாற்றுவலுவுள்ளோராக ஆக்கப்பட்டனர்

## கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவலின்படி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 620 மாற்றுவலுவுள்ளோர்கள் காணப்படு கின்ற நிலையில் அதில் ஆயிரத்து 539 பேர் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மாற்றுவலுவுள்ளோராக ஆக்கப்பட்டவர்கள் என கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் அடிப்படையில் 2 ஆயிரத்து 620 பேர் மாற்றுவலுவுள்ளோராக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் யுத்தம் காரணமாக மாற்றுவலு வுள்ளோராக ஆக்கப்பட்டவர்கள் ஆயிரத்து 539 பேரும், பிறப்பின் காரணமாக 560 பேரும்,நோய் காரணமாக 250 பேரும், விபத்தினால் 119 பேரும், இயற்கை அனர்த் தங்களால் 152 பேரும் உள்ளடங்குகின் றனர்.

இவர்களில் கால் ஒன்றை இழந்தவர்கள் 469 பேரும், இரண்டு கால்களை இழந்த வர்கள் 24 பேரும், கை ஒன்றை இழந்த வர்கள் 211 பேரும், இரண்டு கையை இழந்தவர்கள் 21 பேரும், கண் ஒன்றை இழந்தவர்கள் 239 பேரும், இரண்டு கண்களை இழந்தவர்கள் 43 பேரும், முழுமையான மாற்றுவலுவுள்ளோர்கள் 63 பேரும் காணப்படுகின்றனர்.

இவர்கள் கரைச்சி பிரதேசத்தில் ஆயி ரத்து 177 பேரும்,கண்டாவளையில் 596 பேரும், பூநகரியில் 441 பேரும், பச்சிலைப் பள்ளியில் 406 பேரும் உள்ளனர் என அதில் தெரிவிக்கப்படுகின்றது. (2-312-281)

# ‘மாதிரி பனம் கைப்பணி’ பயிற்சி நெறி ஆரம்பிப்பு

(கிளிநொச்சி)

பனம் கைப்பணி மாதிரி கிராமம் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்தில் வன்னி குளம் கிராம சேவையாளர் பிரிவில் கிளி நொச்சி மாவட்ட இணைப்பாளர் வி.தர்ம குலசிங்கம் தலைமையில் மாதிரி பனம் கைப் பணி பயிற்சி நெறி கடந்த 7 ஆம் திகதி செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது.

இதில் 60 பயனாளிகள் கலந்து கொண்ட னர்.

இப் பயிற்சி நெறி 5 மாத காலத்திற்கு நடைபெறவுள்ளதாகவும் பயிற்சி நெறியில் பங்கு பற்றும் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங் கப்படும்.

இதில் பிரதம விருந்தினராக பனை அபி விருத்தி சபையின் தலைவர் மாரிமுத்து கண பதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் முகா மையாளர் கா.கோபாலகிருஷ்ணன், கிராம சேவையாளர் எஸ்.சர்மிளா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இப் பயிற்சி நெறி முடிவடையும் காலப் பகுதியில் சிறு சுவடுகள் எனும் அமைப்பின் கீழ் பயனாளிகள் இணைத்துக் கொள்ளப் படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

# தொழில் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(வவுனியா)

வவுனிக்குளம் பாலிநகர் இலங்கை தொழில் பயிற்சி நிலையத்தில் 2016 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்குரிய தொழில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக (NVQ Level) புதிய மாணவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய தகவல் தொழில்நுட்ப தொடர் பாடல், தையல் பயிற்சி, மின்னிணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மாணவர்கள் இணைத்துக் கொள் ளப்படவுள்ளனர்.

ஆதலால் பதிவுகளை எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக மேற் கொள்ளுமாறு நிலைய பொறுப்பதிகாரி செ.திருக்குமரன் அறிவித்துள்ளார். (2)

# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட புனித அந்திரேயா முன்பள்ளி சிறார்களின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள தென்னிந்திய திருச் சபையின் முன்பள்ளி மைதானத்தில் மாங் குளம் தென்னிந்தியத் திருச்சபையின் அருட் பணி டீ.எஸ். குகநேசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மு/ மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் த. பிரேமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி, மாங்குளம் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் பங் குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர், மாங்குளம் கிராம அலுவலர் ரி.சண்முகராஜா, முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள முன்பள்ளி இணைப்பாளர் எஸ். அறிவழகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (2-15)

# பதில் செயலாளர் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட துணுக் காய் பிரதேச சபையின் பதில் செயலாளராக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முகா மைத்துவ உதவியாளராக (தரம் I) கடமை யாற்றிய கந்தையா தனபாலசிங்கம் கடந்த 19 ஆம் திகதி முதல் செயற்படும் படியாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமனக் கடிதம் வழங் கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தனது பதில் செயலாள ராக கடமையை அவர் பொறுப் பேற்றுள் ளார். (2-15)




இலங்கை வங்கி கிளைகளில் 5 எஸ் இனை நடைமுறைப்படுத்துவதில் முதல்தர வங்கிக்கிளையாக வடமாகாணத்தில் திருநெல்வேலிக்கிளை தெரிவு செய்யப்பட்டது. இதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இலங்கை வங்கியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிப்பொதுமுகாமையாளர் பாலித ஜினசோமவினால் திருநெல்வேலிக்கிளை முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-15

### (08.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 1 | 21) 3 | 31) 2 |
| 2) 3 | 12) 3 | 22) 3 | 32) 1 |
| 3) 2 | 13) 2 | 23) 3 | 33) 3 |
| 4) 3 | 14) 3 | 24) 1 | 34) 3 |
| 5) 3 | 15) 2 | 25) 1 | 35) 2 |
| 6) 1 | 16) 1 | 26) 2 | 36) 3 |
| 7) 1 | 17) 2 | 27) 1 | 37) 2 |
| 8) 2 | 18) 1 | 28) 1 | 38) 1 |
| 9) 1 | 19) 3 | 29) 2 | 39) 2 |
| 10) 3 | 20) 2 | 30) 2 | 40) 2 |


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:40<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5901 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 56செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/அரச தொழில்<br>தொ.இ: G/5903 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 20<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: B/5904 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 38செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/5905 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 38<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:IT<br>கொலண்ட் PR<br>தொ.இ: B/5906 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 57சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/5911 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 16சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc<br>லண்டன் PR<br>தொ.இ: B/5907 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5915 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதவான் இருக்கையில் அமர வைக்கப்பட்டார்

### சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு



யானைக்குட்டி ஒன்றை சட்ட விரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகேயை கங்கொடவில நீதவான், கனிஸ்க விஜேயரத்ன, சிறப்பாக கவனித்தமை தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த முறைப்பாட்டை பிரதம நீதியரசரிடம் முன்வைத்துள்ளது.

திலின கமகே, கனிஷ்கவின் நண்பர் என்ற வகையிலேயே இந்த கவனிப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த 2 ஆம் திகதியன்று குற்றம் சுமத்தப்பட்ட நீதவான் திலின கமகே கங்கொடவில நீதிமன்றில் சரணடைந்த போது அவருக்கு மேல்மாடிக்கு செல்ல மின்னுயர்த்தியை பயன்படுத்த அனுமதித்தமை மற்றும் நீதவான் அறையின் இருக்கைகளில் அமர வைத்தமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த சிறப்பு கவனிப்பு நடவடிக்கைகள் நீதித்துறையின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை குறைத்து விடும். எனவே, இது தொடர்பில் விசாரணைகள்முன்னெடுக்கப்பட வேண்டும்என்று சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் கேட்டுள்ளது. (இ-10)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு நான்காம் திருவிழா



## அருள்வாய் நாகபூஷணி

முத்து நகை ரத்தினம் மூக்குத்தி வளையல்
இனிமையான கங்கணம் மின்னிடும் செம்பட்டு
பௌர்ணமி நிலவு முகம் பவளச் செவ்வாயும்
பக்தருக்கு அருள்பவளே காகுத்தன் தங்கையளே
ஒளியினிலே உதித்தவளே பொன்னிற மேனியளே
சீர் மேவுஞ் சித்திரமே தங்கப் பதுமையே
விஷம் ஐந்துதலை நாகத்தினில் அச்சமின்றி
அமுத கண்களால் அருள்வாய் நாகபூஷணி

அபிநாத்
8B
யாழ். இந்துக்கல்லூரி

## ஆறுதலே நயினை நாகபூஷணியே!

ஸ்வரங்களில் குடிகொண்ட கலைவாணியே நாகம்மா–உன்
வரங்களில் வாழ்ந்தால் வருமா பூகம்பம் –உன்
கரங்களில் சேர்ந்தால் சீறுமா கார்மேகம் –உன்
அருள்களில் அணைந்தால் ஆறுதலே நயினை நாகபூஷணியே

ஸ்வரங்களில் கோ.சதீஸ்
இராஜகிராமம்

## தாமதம் இல்லாது தயை புரிந்தருள்செய்

**பல்லவி**

நயினை அம்மனே உன்னைத் தினம் துதித்தால்
துன்பங்கள் அகன்றிடும் இன்பங்கள் பெருகிடும்
(நயினை)


**அனுபல்லவி**

தொல்லை இல்லாததோர் தூய வாழ்வு வாழ
தொடருகின்றேன் அம்மா இணையடி தொழுதேன்
(நயினை)

**சரணம்**

அம்மா, அம்மா என்று அழைத்திட ஓடிவருவாய்
ஆரமுதே அம்மா அடிபணிந்தேன் உனையே
தாமதம் இல்லாது தயை புரிந்தருள்செய்
தருணம் இது அம்மா கடைக்கண் பாராயோ
(நயினை)

கலாவித்தகர்
திருமதி க.மலர்விழி
சண்டிலிப்பாய்.



# சுற்றாடலைக் காப்பதில் பாடசாலை சுற்றாடல் முன்னோடிக் குழுக்களின் பங்கு அவசியம்

மனிதனுக்காகப் பூமி படைக்கப்படவில்லை. பூமிக்காகவே மனிதன் படைக்கப்பட்டான் என்பதை சூழலியலாளர்கள் வற்புறுத்தி வரும் இவ்வேளை இயற்கையின் கொடைகளான தாவரங்கள், விலங்குகளை மனிதன் தனது பேராசை பல்கிப் பெருகிவரும் தேவைகள் என்பவற்றினால் திட்டமிடாத முறையில் எதிர்விளைவுகளை சிறிதும் கவனத்தில் கொள்ளாது அழித்து வருகின்றான்.

புவியில் தாவரங்கள், விலங்குகள் தோன்றிய பின்னரே மனிதன் தோன்றினான். ஆரம்ப காலங்களில் இயற்கைக்கும் சுற்றாடலுக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்த மனிதன் அறிவியல் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்று முதன்மையானவனாக மாறிவிட்டான். இதனால் சூழலை அழிக்கும் முதன்மைக்காரணியாகவும் அவனே காணப்படுகின்றான்.

எமது மூதாதையர்கள் தொன்றுதொட்டு பெரும் கூருணர்ச்சியுடன் சுற்றாடலுடன் பிணைக்கப்பட்டவர்களாக இருந்தனர். அதனால் அவர்கள் சுற்றாடலைப் பேணிக்காத்தது போலவே சுற்றாடலும் எம் மூதாதையர்களின் இருப்பை உறுதி செய்தது. எம் மூதாதையர் இயற்கைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை செவ்விந்தியத் தலைவன் சியாட்டலின் கூற்றிலிருந்து அறியலாம்.


உயிர்களுக்கு ஆதாரம் நீர். “அருவி ஓடை வழியாக பளிங்குக் கற்களுக்கு மேலாக மின்னிப் பாயும் நீர் வெறும் நீர் தாரை அல்ல. அவை எமது முன்னோரின் உதிரம். இந்த நீர்த்தாரைகள் இசைக்கும் ஓசை வேறொன்றும் இல்லை. அவை எமது முன்னோர்கள் கதைக்கும் ஓசையாகும். இந்த ஆறு, நீர்நிலைகள் எமது சகோதரர்கள். அவை எமது தாகத்தை தீர்க்கின்றன”

இத்தகைய சுற்றாடலுக்கு இசைவற்ற விதத்தில் மனிதன் செயலாற்ற ஆரம்பித்த நாள் முதல் சுற்றாடல் பேணலை நாம் இழக்க தொடங்கினோம். நாடு பாரிய அபிவிருத்தி யொன்றை நோக்கிப் பயணிக்கும்போது இக்காலத்தில் அபிவிருத்தியானது சுற்றாடலைப் பேணிப் • பாதுகாத்தவாறு முன்னோக்கிச் செல்லும்போதே அது நிலைத்து நிற்கக்கூடியதாக அமையும். இதனாலேயே அபிவிருத்தியில் சுற்றுச்சூழலைக் காப்பது மிக முக்கிய தேவை என்பது உணரப்பட்டுள்ளது.

சூழலை அழிக்கும் மனிதனை கட்டுப்படுத்தும் சிறந்த காரணியாக பாடசாலையைத் தெரிவு செய்வதில் முதல் இடம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கே உரித்தாகும். 1980 ஆம் ஆண்டின் 47 இலக்க தேசிய சூழல் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. Let us Protect The Environment என்ற மகுட வாசகத்துடன் இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபை பாடசாலைகளின் ஊடாக வளம் மிக்க சூழலைக் கட்டியெழுப்புவதில் முதன்மை வகிக்கின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேடமான சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்களாக சுற்றாடல் சிறுவர் கழகங்கள், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் என்பன முக்கியமானவையாகும். சுற்றாடலின் அருமை பெருமைகளை பாடசாலை மாணவர்களுக்கு எடுத்து உணர்த்துவதுடன் சுற்றாடல்சார் அறிவை விருத்தி செய்வதனூடாக அவர்கள் மத்தியில் உளப்பங்குசார் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு அது உறுதுணையாக அமையும் அதேவேளை மாணவர்களை பிரயோக ரீதியான சுற்றாடல் பேணல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்கச் செய்வதற்கும் இது வழிவகுக்கும்.

மேலும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டமானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் பேணல் அறிவையும் சுற்றாடல் நட்புறவான உளப்பாங்குகளையும் வளர்ப்பதில் உறுதுணையாக உள்ளது. அதேபோல் அவர்களின் சுற்றாடல் செயற்பாடுகளிலான பங்கேற்பை முன்னேற்றிக்கொள்ள அது பெரும் உந்துதலை அளிக்கின்றது.



இதனாலேயே பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியை ஏட்டுக் கல்வியுடன் மட்டுமன்று பிரயோக ரீதியான செயற்பாடுகளுடன் கூடிய கல்வி முறையாக மாற்ற கல்வியமைச்சினால் பல நவீன மயமாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு மாணவர்களை மையப்படுத்திய கல்வியானது சுற்றாடல் இயைபானதாக அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட கல்வித் திட்டமாக அமையுமெனின் இன்று உருவெடுத்துள்ள தீவிர சுற்றாடல் பிரச்சினைகளுக்கு மத்தியில் மாணவர் சமூகத்தை சுற்றாடலினுள் உள்வாங்குவது காலத்தின் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமேயில்லை. மேலும் மாணவர்களுக்கு தாம் வாழும் சூழலைப் புரிந்து கொள்வதற்கு அவசியமான அறிவையும் உளப்பாங்கையும் உருவாக்கிக் கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபடவாய்ப்புள்ளது. அது சுற்றாடல் அவதானிப்புக்கள், ஆய்வுகள், ஒப்படைகள் முதலிய பங்கேற்பு முறைகளினூடாக இடம்பெறுவதாகும். இதுதான் சுற்றாடலின் ஓரங்கம் என்பதைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுடன் சுற்றாடல் சமநிலையைப் பேணுவதில் மாணவர் பங்களிப்பையும் உறுதிப்படுத்தும்.

இவ்வாறான பின்னணியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களினால் பாடசாலை மாணாக்கரை இலக்காகக் கொண்ட பல்வேறு சுற்றாடல் நட்புறவான நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுவது வரவேற்கப்படக்கூடியதாகும். இதனடிப்படையில் அமுல்படுத்தப்படும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் மூலம் சுற்றாடலை அவதானிப்பதன் ஊடாக வகுப்பறையில் பெற்றுக்கொள்ளும் வரையறுக்கப்பட்ட கல்வியைவிட திறன்கள் நிரம்பிய பிரயோக ரீதியான கல்வியை மாணவர் பெறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்பது உண்மையே. அதேபோல் சுற்றாடல் மாசடைதலை தடை செய்வதும் ஒரு முதன்மைப்பணியாகவும் அது எதிர்காலச் சவால்களுக்கான ஒரு முதலீடாகவும் அமையும் என்பது உறுதி.

சுற்றாடல் முன்னோடிக் குழு மாணவர்கள் சுற்றாடல் நட்புறவான உளப்பாங்குகளால் போசிக்கப்படுவதும் அவர்களின் ஊடாக நாட்டு மக்களின் உள்ளங்களில் கொண்டு சேர்க்கப்படுவதும் காலத்தின் தேவையாகும். இதனூடாக எதிர்காலத்தில் நாட்டு மக்களின் மத்தியில் சுற்றாடல் மீதான சிறந்த உளப்பாங்குகளை விதைப்பதற்கு பாடசாலைகள் பக்கபலமாக அமையும் என்பது திண்ணம்.

மேலும் தற்போதைய சுற்றாடல் வேகமாக மாற்றமடைந்து செல்வதால் பூகோள சுற்றாடல் பிரச்சினைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. பூகோள வெப்பநிலை உயர்வு, ஓசோன் மண்டலம் சிதைவடைதல், மண்சரிவு, மண்ணரிப்பு, பனிமலை உருகுதல், கடல் மட்டம் உயர்தல், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை அதிகரிப்பு, காடழிப்பு போன்ற சுற்றாடல் பிரச்சினைகளுக்கு மனித சமுதாயம் முகம் கொடுக்கும் நிலையேற்பட்டுள்ளது. இவ்வாறான சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதனை நோக்கமாகக் கொண்டு பாடசாலை மாணவர் மத்தியில் சுற்றாடல் முன்னோடிக்குழு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றாடலைக் காப்பது அவசியமாகும். இத்தகைய ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் முகமாகவே மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஜூன் மாதம் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 30.05.2016 திங்கள் முதல் 03.06.2016 வெள்ளி வரை தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்தி பாடசாலைகளில் சிரமதானம், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்தல்,நிலப்பயன் பாடும் மர நடுகையும், சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் முதலிய பல செயற்பாடுகளை தினமும் ஒவ்வொன்றாக மாணவர்கள் மத்தியில் முன்னெடுத்ததுடன் உலக சுற்றாடல் தின இவ்வாண்டிற்கான மகுடவாசகம் “வனஜீவராசி வளங்களைச் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு எதிராக எழுவோம்” என்ற கருப்பொருளுடன் சுற்றாடல் தினத்தை ஜூன் 5 இல் சிறப்பாகக் கொண்டாடியது.

திருமதி கீதாஞ்சலி சுகந்தன்
ஆசிரியர்,
கிளி/ பளை
மத்திய கல்லூரி




கல்வித் தரிசனம்

# ரூ.670 கோடி மதிப்புள்ள பழங்கால சிலைகளை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைத்தது அமெரிக்கா

இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 200 பழங்காலச் சிலைகளை அமெரிக்கா இந்தியாவிடம் திரும்ப ஒப்படைத்துள்ளது. சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.670 கோடி) மதிப்புள்ள இச்சிலைகளில் விநாயகர் சிலை, மாணிக்கவாசகர் சிலை உள்ளிட்டவை அடங்கும்.

இதையொட்டி, அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் உள்ள அந்நாட்டு ஜனாதிபதியின் விருந்தினர் மாளிகையில் (பிளேர் ஹவுஸ்) நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில்,



உலக நாடுகளுக்கு இடையேயான நட்புறவில் நிகழ்கால அம்சங்கள் முக்கிய பங்குவகிக்கும் என்பதுதான் பொதுவான நடைமுறையாகும்.

ஆனால் சிலசமயம் இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவில் அவற்றின் கலாசாரம் மற்றும் பாரம்பரியம் முக்கிய பங்காற்றும்.

இந்தியாவின் தொன்மைவாய்ந்த பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தை இன்றளவும் பறைசாற்றுவதில் பழங்காலச் சிலைகளுக்கு முக்கிய இடம் உண்டு. அமெரிக்காவுக்கு கடத்தப்பட்ட சிலைகளை இந்தியாவிடம் திருப்பி அளிக்க உரிய நடவடிக்கை எடுத்ததற்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிலைகள் பல கோடி ரூபாய் மதிப்புடையவையாக இருக்கலாம். ஆனால், இந்திய மக்கள் இவற்றைத் தங்களது பெருமைமிக்க கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவும், தங்களின் வரலாற்றை பிரதிபலிக்கும் பொக்கிஷங்களாகவும்தான் பார்க்கின்றனர் என்று மோடி பெருமிதம் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் அருண் கே.சிங் கூறியபோது, "அமெரிக்கா திரும்ப ஒப்படைத்துள்ள சிலைகளில், சென்னையில் உள்ள ஒரு சிவன் கோயிலிலிருந்து திருடப்பட்ட 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.10 கோடி) மதிப்புள்ள மாணிக்கவாசகர் சிலை, 1,000 ஆண்டுகளுக்கு முந்தைய விநாயகர் சிலை உள்ளிட்ட 12 சிலைகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. மீதியுள்ள சிலைகளும் விரைவில் இந்தியா அனுப்பப்படும்" என்றார. (இ-10)


# உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திக்காக கடலில் மூழ்கடிக்கப்பட்ட பாரிய விமானம்

துருக்கிய அதிகாரிகள் 177 அடி நீளமான விமானமொன்றை துருக்கிக்கும் கிறிஸ்க்கும் இடையிலான ஏஜியன் கடலில் கடந்த சனிக் கிழமை மூழ்கடித்தனர்.

அப்பிராந்தியத்தில் டைவிங (சுழியோடல்) சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக இந்த பழைய விமானம் மூழ்கடிக்கப்பட்டது.

எயார்பஸ் ஏ- 300 ரகத்தைச்சேர்ந்த விமானமொனறே இவ்வாறு மூழ்கடிக்கப்பட்டது. 54 மீற்றர் (177அடி) நீளமான இவ் விமானத்தின் இறக்கைகளின் முனைகளுக்கு இடையிலான தூரம் 44 மீற்றர்கள் (144 அடி) ஆகும்.

இந்த விமானம் ஒரு செயற்கை பவளப்பாறையாக மாறும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.



இந்த போயிங் ஏ300 ரக விமானமே செயற்கை பவளப் பாறையாக பயன்படுத்துவதற்காக இதுவரை மூழ்கடிக்கப்பட்ட மிகப் பெரிய விமானம் எனக் கருதப்படுகிறது.

துருக்கியின் அய்தின் மாகாணத்தைச் சேர்ந்த மேயர் ஒஸ்லெம் சேர்சி யோக்லு இது தொடர்பாக கூறுகையில், "இந்த விமானம் மூழ்கடிக்கப்பட்டமைக்கு இரு நோக்கங்கள் உள்ளன.

முதலாவது நோக்கமானது ஒரு வருட காலத்துக்குள் சுழியோட விரும்பும் உல்லாசப் பயணிகளைக் கவரும் நகரமாக குஸதாசி நகரை மாற்றுவதாகும். இரண்டாவது நோக்கம். இது கடலிலுள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதாகும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-10)

# விமானம் கடுமையாக குலுங்கியதால் பரபரப்பு

லண்டனிலிருந்து மலேசிய கோலாலம்பூருக்கு 378 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணித்த மலேசிய எயார்லைன்ஸ் விமானத்தில் கடும் குலுக்கம் ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் சிலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த எயார் பஸ் ஏ380. எம்.எச்.1 விமானம் வங்காள விரிகுடாவிற்கு மேலாக பறக்கையில் குறுகிய நேரத்துக்கு இவ்வாறு கடுமையாக குலுங்கியத்தாக அந்த விமானசேவை நிறுவனம் கூறுகிறது.

தொடர்ந்து மேற்படி விமானம் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி விமானத்தில் பயணித்து காயமடைந்த பயணிகளுக்கும் விமான ஊழியர்களுக்கும் விமான நிலையத்தில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் சுமார் 34 பேர் காயமடைந்துள்ளதாக மலேசியாவிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் எவருக்கும் பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் அடுத்தகுறி எகிப்து பிரமிட்




எங்களின் அடுத்தகுறி, உலகில் உள்ள ஏழு அதிசயங்களில் ஒன்றான எகிப்து பிரமிட்கள் தான் என்பதை காட்டும் விதமாக ஐ.எஸ். தீவிரவாதிகள் வீடியோ ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள வீடியோவில், ஈராக்கில் அமைந்துள்ள 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கோயில் வெடிகுண்டு மூலம் தகர்க்கப்படுகிறது.

தகர்க்கப்பட்ட இடத்தில் இருந்து புகைமூட்டம் கிளம்புகிறது.

இதனை இரண்டு முறை எடுத்துரைக்கும் அந்த வீடியோவின் இறுதி காட்சியில், எகிப்திய பிரமிட்டின் புகைப் படம் இடம்பெறுகிறது,

இதன்மூலம், இவர்களின் அடுத்த குறி எகிப்திய பிரமிட்தான் என்பதை உணர்த்துகிறது.

இதற்கு முன்னர், பல்மைரா நகரில் அமைந்துள்ள பழங்கால கோயிலான Baal-இல் அமைந்துள்ள சிலைகளை சேதப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது அந்த கோயிலை மறுசீரமைப்பு செய்வதற்கான மதிப்பீட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. (இ-10)

# மெக்ஸிகோவில் 6.4ரிக்டர் நிலநடுக்கம்; பீதியால் வீதியில் திரண்ட பொதுமக்கள்

(மெக்ஸிகோசிற்றி)

மெக்ஸிகோவில் தெற்கு பசுபிக் கரையோரப் பகுதியில் நேற்று புதன்கிழமை பதிவான சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால், சிறிய சேதங்கள் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.



இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆகப் பதிவாகியுள்ளதுடன், இதனால் பீதியடைந்த மக்கள் வீதிகளில் திரண்டு ஓடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க புவிச்சரிதவியல் ஆய்வு நிலையம், "மெக்ஸிகோவின் வடமேற்கு அபாபுல்கோவில் இருந்து 60 மைல் தூரத்தில் அமைந்துள்ள குய்ரெரோ மாநிலத்தின் Tecpan de Galean பகுதிக்கு அருகிலேயே இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இது 15 மைல் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து பல கட்டடங்களின் கூரைகள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன், கட்டடங்களும் சிறிய சேதங்களுக்கு இலக்காகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் இதன்போது படுகாயமடைந்தவர்கள் தொடர்பில், இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

நிலநடுக்கத்தை அடுத்து பீதியுற்ற மக்கள் கட்டடங்களில் இருந்து வெளியேறி வீதிகளில் குழுமியிருந்தனர்.

ஆயினும் - வடகிழக்கு மெக்ஸிகோ நகரின் வைத்தியசாலைகள், விமான நிலையம் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகியவை வழமை போல இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# இராணுவக் குடும்பங்களுக்கான ரணவிருகம கிராமமே அழிந்தது

(கொழும்பு)

**கொஸ்கம -சாலாவ இராணுவ முகாமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தினால் அதற்கு அருகில் இருந்த ரணவிருகம எனப்படும் இலங்கை, இராணுவ குடும்ப ங்களுக்கான குடியிருப்புத் தொகுதி முற்றாக அழிந்து போயிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



போரில் இறந்த இலங்கை படையினரின் குடும்பங்கள் மற்றும் உடல் உறுப்புக்களை இழந்த படையினரின் குடும்பங்களுக்காக, 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த ரணவிருகம வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயுதக் கிடங்கின் எல்லையை ஒட்டியதாக அமைக்கப்பட்ட இந்த ரணவிருகம கிராமத்தில், 107 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் 80 வீடுகள் முற்றாக அழிந்து போயுள்ளன. ஏனைய வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இந்தக் கிராமத்திலுள்ள வீடுகள், குண்டுச் சிதறல்களால் சிதைந்து போயிருப்பதுடன், எங்கும் குண்டுகளின் சிதறல்கள் பரவிக் கிடக்கின்றன.

இந்தக் கிராமத்தில் வசித்த இலங்கை படையினரின் குடும்பங்கள் இன்னமும் தற்காலிக முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளன.


அதேவேளை, சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பினால், சாலாவ நகரப் பகுதியில் இருந்த கடைகள் சிதைந்து போயிருக்கின்றன.

எனினும், முகாமின் மத்திய பகுதிக்குள் இன்னமும் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டவில்லை. சிறியளவிலான வெடிப்புகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதங்கள் சேமிக்கப்பட்டிருந்த கட்டடங்கள் எலும்புக்கூடு போன்று காட்சியமளிப்பதை வானத்தில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள், மூலம் தெளிவாக பார்க்க முடிகிறது. (இ-10)
















# சிறுவர் அரங்கம்

1456

…பெருந்துறவியான கோபோ ஓரிடத்தில் தங்க மாட்டார். ஒவ்வொரு ஊராகச் சென்று கொண்டிருப்பார். ஒரு முறை அவர் கடுமையான வெயிலில் நடந்து வந்தார். தாகம் அவரை வாட்டியது. அருகில் இருந்த ஊர் ஒன்று அவருக்குத் தெரிந்தது. அங்கே சென்ற அவர் ஒரு வீட்டின் முன் நின்றார்.

"அம்மா தாயே! தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொடுத்தால் குடித்துவிட்டுச் செல்வேன்," என்று குரல் கொடுத்தார்.

பெண்மணி ஒருத்தி வெளியே வந்தாள். "ஐயா! சிறிது நேரம் பொறுமையாக இருங்கள். குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகிறேன்," என்று இனிமையாகச் சொன்னாள் அவள். ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. அவள் வரும் அறிகுறியே தெரியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்தார் கோபோ. "நான் யார் என்பதை அறியாமல் என்னிடமே விளையாடுகிறாளா? அவள் வரட்டும் நான் யார் என்பதை அவளுக்குக் காட்டுகிறேன்," என்று உள்ளுக்குள் பொறுமினார்.

இடுப்பில் தண்ணீர்க் குடத்துடன் மெல்ல நடந்து வந்தாள் அவள். வீட்டிற்குள் சென்ற அவள், ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் வந்தாள். அதை அவரிடம் நீட்டினாள்.

"தண்ணீர் கொண்டு வருவதற்கா இவ்வளவு நேரம்?" என்று கோபத்துடன் கேட்டார் கோபோ.

"ஐயா! இங்கே அருகில் எங்கும் தண்ணீர் இல்லை. ஐந்து கல் தொலைவில் உள்ள குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகிறேன்!"

அப்போதுதான் கோபோ அவளைக் கவனித்தார். வெயிலில் நடந்ததால் அவள் உடல் எங்கும் வியர்வை வழிந்தது. அவருடைய கோபம் போன இடம் தெரியவில்லை. "இந்த வெயிலில் ஐந்து கல் நடக்க வைத்து விட்டோமே' என்று வருந்தினார்.

"இதை ஏன் என்னிடம் முன்னரே சொல்லவில்லை?" என்று கேட்டார்.



## தண்ணீர் தண்ணீர்!

"ஐயா! மழை பெய்யாததால் இங்கே உள்ள கிணறுகளும், குளங்களும் வற்றிவிட்டன. ஐந்து கல் தொலைவில் உள்ள குளத்தில்தான் தண்ணீர் உள்ளது. நாங்கள் எல்லாரும் நாள் தோறும் அவ்வளவு தொலைவு சென்றுதான் தண்ணீர் எடுத்து வருகிறோம். நீங்கள் கேட்டபோது வீட்டில் தண்ணீர் இல்லை. அதனால்தான் அங்கே சென்று தண்ணீர் கொண்டு வந்தேன்!" என்று பணிவுடன் சொன்னாள் அவள்.

அவள் தந்த தண்ணீரைக் குடித்தார். அவர் உள்ளம் குளிர்ந்தது.

"அம்மா! உங்கள் அன்பிற்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. உங்களால் இந்த ஊர் மக்கள் தண்ணீர்ப் பஞ்சம் இல்லாமல் வாழப்போகின்றனர்!" என்றார் கோபோ.

அங்கேயே தியானத்தில் ஆழ்ந்தார். நீண்ட நேரம் அவர் உதடுகள் மந்திரங்களைச் சொல்லியபடி இருந்தன. தியானம் கலைந்து எழுந்தார். தன் கையில் இருந்த தடியால் தரையில் தட்டினார். என்ன வியப்பு! அங்கே தரை பிளவுபட்டு நீரூற்று ஒன்று வேகமாக வெளியே வந்தது.

"அம்மா! இந்த இனிமையான நீரூற்று என்றும் வற்றாது. நீங்களும் இந்த ஊர் மக்களும் வளமாக வாழ்வீர்கள்!" என்று வாழ்த்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

ஒரு பெண்ணின் உபசரிப்பு குணத்தால் அந்த கிராமமே ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டதைப் பார்த்தீர்களா?

நீங்க எப்படி!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 68 - ரோமப் பேரரசன் நீரோ தற்கொலை செய்து கொண்டான்.
- 1873 - இரு வாரங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட லண்டன் அலெக்சாந்திரா அரண்மனை தீயினால் அழிந்தது.
- 1903 - அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார்.
- 1923 - பல்கேரியாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1928 - அவுஸ்திரேலியாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் முதற் தடவையாக சார்ல்ஸ் கிங்ஸ்போர்ட் ஸ்மித் வானூர்தியில் கடந்தார்.
- 1934 - வால்ட் டிஸ்னியின் டொனால்ட் டக் வரைகதை வெளிவந்தது.
- 1935 - வடமேற்கு சீனாவில் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பை சீனக் குடியரசு அங்கீகரித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் கிழக்கு கரேலியாவினுள் ஊடுருவியது.
- 1946 - பூமிபோன் அடுல்யாடெ தாய்லாந்தின் அரசனாக முடிசூடினார். இவரே இன்று உலகில் மிக நீண்டகால அரசர் ஆவார்.
- 1962 - தங்கனீக்கா குடியரசாகியது.

### பிறப்புகள

- **1781 - ஜார்ஜ் ஸ்டீபென்சன் நீராவிப் பொறியைக் கண்டுபிடித்த இங்கிலாந்து எந்திரப்பொறியாளர் மற்றும் கட்டுமானப் பொறியாளர். தொடர் வண்டிப் பாதையின் தந்தை - (இ1848)**
- 1945 - கிரண் பேடி, இந்தியாவின் முதல் பெண் இந்திய காவல் சேவை அதிகாரி
- 1975 - ஆன்ட்ரூ சைமன்ஸ், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்
- 1977 - பேஜா ஸ்டொயாகொவிக், செர்பிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள

- 68 - நீரோ, ரோமப் பேரரசன. (பி. 37)
- 1870 - சார்ல்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில எழுத்தாளர். (பி. 1812)
- 1946 - ஆனந்தா மஹிடோல், (எட்டாவது ராமா), தாய்லாந்து மன்னர். (பி. 1925)
- 1974 - மிகுவேல் ஆஸ்டூரியாஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர. (பி. 1890)
- 1989 - ஜோர்ஜ் பீடில்ல், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1903)
- 1994 - ஜான் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1903)
- 1834 - வில்லியம் கேரி, பப்திஸ்து சபையைத் தொடக்கியவர்களில் ஒருவர், பைபிளைப் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்த்தவர். (பி. 1761)

## ஜார்ஜ் ஸ்டீபென்சன்



ஜார்ஜ் ஸ்டீபென்சன்கல்வியறிவே இல்லாமல் நீராவிப் பொறியைக் கண்டுபிடித்த இங்கிலாந்து எந்திரப்பொறியாளர் மற்றும் கட்டுமானப் பொறியாளர். தொடர்வண்டிப் பாதையின் தந்தை எனப் போற்றப்படுபவர். நீராவி வண்டிகளின் போக்குவரத்திற்கு உலகின் முதல் பொது தொடர்வண்டிப் பாதைக்கான தண்டவாளங்களை அமைத்தவர். 4 அடி 8 1.5 அங்குலம் (1,435 மி.மீ) நீளத்திற்கு இவர் அமைத்த இரயில் பாதை இன்றும் உலக தரமான பாதையாக உள்ளது. அது "ஸ்டீபன்சன் பாதை" என அழைக்கப்படுகிறது. ஜார்ஜ் ஸ்டீபென்சன் இங்கிலாந்து நாட்டிலுள்ள நார்தம்பர்லேண்ட் பகுதியைச் சேர்ந்த வைலம் என்ற ஊரில் 1781-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் நாள் பிறந்தார். தந்தை பெயர் இராபர்ட். தாய் மேபல். இவர்களுக்கு இரண்டாவது மகனாக ஜார்ஜ் ஸ்டீபென்சன் பிறந்தார். 1802 -இல் இவர் பிரான்சஸ் ஹென்டெர்சன் என்ற மங்கையை மணம் செய்து கொண்டார். பின்னர் வில்லிங்டன் என்ற ஊருக்குக் குடிபெயர்ந்தார். அங்கு ஒரு சுரங்கத்தில் பணிபுரிந்தார். பணி நேரம் போக மற்ற நேரங்களில் காலணிகளைத் தயாரிப்பது கடிகாரங்களைச் செப்பனிடுவது போன்ற வேலைகளில் ஈடுபட்டார். இவை ஜார்ஜ் ஸ்டீபென்சனுக்கு அதிக வருமானத்தை அளித்தன. 1803 இல் இவருக்கு இராபர்ட் என்ற மகன் பிறந்தான். 1804 இல் கில்லிங்வொர்த் என்ற பகுதியைச் சேர்ந்த வெஸ்ட்மூர் என்ற ஊரில் குடியேறினார். அங்கு இவர் பணியாற்றுகையில் இவ்வினையருக்க ஒரு மகள் பிறந்து சில வாரங்களில் இறந்துவிட்டார். 1806 இல் இவருடைய மனைவியும் காலமானார். இதன் பிறகு இவருக்கு ஸ்காட்லாந்து சென்று பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது அப்போது தனதுமகன் இராபர்டை தனது சகோதரி எலினர் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார். இவர் ஸ்காட்லாந்து சென்ற சில மாதங்களுக்குப் பிறகு இவருடைய தந்தைக்கு சுரங்கத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் கண்பார்வை பறி போனது. கில்லிங்வொர்த்தில் நீரிறைக்கும் குழாய் ஒன்று பழுதுபட்டது அதைச் சரி செய்வதற்காக இவர் அழைக்கப்பட்டார். அதை இவர் வெற்றிகரமாகச் செய்து முடித்ததால், நீராவியால் இயங்கும் பொறிகளைக் கண்காணிக்கும் பணியில் அமர்த்தப்பட்டார். அப்போது சுரங்கங்களில் ஏற்படும் தீ விபத்துகளிலிருந்து விடுதலை பெற பாதுகாப்பான விளக்கு (Safety Lamp) ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். அதே சமயம் புகழ்பெற்ற அறிவியலறிஞர் சர்.ஹம்ப்ரி டேவி என்பவரும் இதே முயற்சியில் ஈடுபட்டிருந்தார். 1848 இல் எலென் கிரிகோரி என்ற பெண்ணை இவர் மூன்றாவது திருமணம் செய்து கொண்டார். திருமணமான சில மாதங்களில் இவருக்கு 67 வயதான போது நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்.

# சாலாவ குண்டுச் சிதறல்களை மயானத்தில் புதைக்க ஏற்பாடு

சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் சிதறிக் கிடக்கும் குண்டுகளின் சிதறல்கள் அந்தப் பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் புதைக்கப்படவுள்ளதாக தொண்டர் படை தளபதி மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக தெரிவித்துள்ளார்.

கொஸ்கம- சாலாவ இராணுவ முகாமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து, மூடப்பட்டிருந்த அவிசாவளை- கொழும்பு வீதி நேற்று முன்தினம் மாலை போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

சாலாவ இராணுவ முகாமில் வெடிவிபத்து இருந்த போது, அங்கு 450 படையினர் இருந்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் தான், இராணுவத்தினரின் உயிராபத்துக்களை குறைக்க முடிந்தது.

இந்த வெடிவிபத்தை அடுத்து, இடம்பெயர்ந்த 60 வீதமான மக்கள் மீண்டும் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

ஏனைய மக்களின் வீடுகள சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகள் அனைத்தும் இரண்டு மாதங்களுக்குள் திருத்திக் கொடுக்கப்படும்.

சாலாவ இராணுவ முகாம் வேறு இடத்துக்கு மாற்றப்படாது. இராணுவ முகாம் பிரதேசம் இன்னமும் பாதுகாப்பற்றதாகவே உள்ளது. சிறிய் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அடுத்த 72 மணித்தியாலங்களுக்குள் துப்புரவுப் பணிகள் முடிவடையும். பொது மக்கள் வாழும் பகுதிகளில் சிதறிக் கிடக்கும் வெடிபொருள் சிதறல்கள் சேகரிக்கப்பட்டு, சாலாவ பிரதேசத்தில் உள்ள மயானத்தின் ஒதுக்குப்புறமாக புதைக்கப்படும்.

10 அடி அகலமான எட்டு அடி ஆழமான இரண்டு குழிகளில், இவை போட்டு புதைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# கட்சி ஆரம்பிக்குமாறு மகிந்தவுக்கு அழுத்தம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பத்தரமுல்லையில் உள்ள அவரது செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்களின் குழுவொன்று, புதிய கட்சியை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், அந்தக் கட்சியினாலேயே வேட்டையாடப்படுகின்றனர். எந்தவொரு கட்சியினதும் ஆதரவு இல்லாத நிலையில் நாம் இருக்கிறோம். இந்த நிலையில் புதிய கட்சி ஒன்றை அமைப்பதே ஒரே வழியாக இருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கையை செவிமடுத்த மகிந்த ராஜபக்ஷ, இந்தக் கோரிக்கையை தாம் தீவிரமாக பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்களுக்கு முனனதாக தம்மைச் சந்தித்த முன்னைய உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளும், இதே கோரிக்கையை விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய கட்சியை ஆரம்பிப்பது குறித்து, அடுத்த சில நாட்களுக்குள் இறுதியான முடிவு எடுக்கப்படும் என்று மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ கூட்டு எதிரணியினருடன் விரைவில் கலந்துரையாடவுள்ளதாகவும அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-10)

# ராஜபக்ஷ பெற்ற கடன் தீர்க்கப்பட்ட பின் வரி குறைக்கப்படும் - நிதி அமைச்சர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்ற கடன்களை திருப்பி செலுத்திய பின்னர் வரி வீதங்கள் குறைக்கப்படும் என்று நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய அவர், மகிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொண்ட கடன்களுக்காகவே இன்று வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறுகிய கால இலக்கின் அடிப்படையில் வரிகளை குறைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)



# 30அமைச்சர்களின் வாகன கொள்வனவுக்கு 117 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது

அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் 30 பேரின் வாகன கொள்வனவிற்காக 117 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது.

குறித்த நிதியினைக் கோரி துணை மதிப்பீடு பத்திரமொன்று நிதி அமைச்சரின் சார்பாக அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

புதிய வாகனங்களை கொளவனவு செய்ய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு அதிக நிதி கோரப்பட்டுள்ளதாகவும், குறித்த துணை மதிப்பீடு மூலம் அமைச்சர் சரத் பொன்சேகா 7 கோடி ரூபாய் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு சில அமைச்சர்களுக்கு இரண்டு வாகனங்களுக்கான கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக மதிப்பீட்டு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# பகிடிவதைகளை அறிவிப்பதற்கு ஒன்லைன் முறை அறிமுகமாகும்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை அறிவிப்பதற்கு ஒன்லைன் முறையை (Online System) அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் தற்போதைய நிலை மற்றும் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்.

இதில் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஸ் பதிரன ஆகியோர் இணைந்து கொண்டுள்ளனர்.

இதன்போது; பகிடிவதைகளை அறிவிப்பதற்கு ஒன்லைன் முறையை (Online System) அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### நேற்று நடந்தது நேற்றோடு

யானையும் பாம்பும் காலம் காலமாய்த் தன் எதிரியை நினைவில் வைத்திருந்து பழி வாங்கும் என்று சொல்வார்கள்.

நம்மிலும் இப்படிப் பலர் இருக்கிறார்கள். இவர்கள் வெட்டுக் குத்து என்று மித மிஞ்சிய நிலைக்குப் போகாவிட்டாலும் ஒத்துழைக்க மறுப்பது, முகத்தைத் திருப்பிக் கொள்வது, எதிர் நடவடிக்கைகளில் இறங்குவது, விரோதத்தை வளர்க்கும் செயல்களில் முனைவது என்று இப்படி இறங்கிவிடுவார்கள்.

இவையெல்லாம் அன்றாட வாழ்வில் மகிழ்ச்சியை அழித்துவிடுவதை இவர்கள் ஏனோ உணர்வதில்லை.

நேற்று நம்மை சுற்றிய இருவரோடு ஒரு வருத்தப்படும்படியான நிகழ்ச்சி -ஒரு காரசாரமான வாக்குவாதம் - அதையும் மீறி ஒரு சண்டை -என்று வைத்துக் கொள்ளுங்கள்.

மறுநாள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வது தானே பெரும்பாலும் மனித இயல்பு?

இது கூடாது.

உணர்ச்சி வசப்படும் நேரத்தில் -பலவீனமான நொடிகளில் மனிதர்கள் தவறு செய்வதுண்டு. அந்தத் தவறு நம்முடையதாகவும் இருக்கலாம். எதிர்த்தரப்பினருடையதாகவும் இருக்கலாம். இந்த நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்தி நாட்கணக்கிலும் வாரக் கணக்கிலும் தொடர்ந்தும் விரோதம் பாராட்டுவது அர்த்தமற்றது.

தினம் தினம் சந்திக்கின்றவர்கள், இரத்த உறவுகள், நிரந்தர தொடர்புள்ளவர்கள் ஆகியவர்களோடு நாம் என்றென்றைக்கும் சுமுகமான உறவை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். காரணம் நம் வாழ்வும் உலகமும் இவர்களைச் சுற்றியது தான். இவர்களை விரோதித்துக் கொண்டு வாழ்ந்து விடலாம். ஆனால் மன நிம்மதி மகிழ்ச்சி இரண்டும் வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டுவிடும். இது பிள்ளைப் பூச்சிகளை வயிற்றில் கட்டிக் கொண்டு வாழ்வதைப் போன்றது.

எனவே சம்பவம் நடந்து முடிந்து பல நாள் கழித்து யார் மீது தவறு என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் வேறு வழியின்றி முன்பு போல் சுமுகமாகப் பழகுகின்ற அந்த எல்லைகளிடையே பெரிய இடைவெளி வேண்டா என்கிறேன். அதாவது, வாரக்ககணக்கில் வளர்க்கும் வருத்தத்தை கோபத்தை மறுநாள் விடியலின் போதே விட்டுவிட வேண்டும்.

நேற்று நடந்தது ஏதோ இரவில் கனவில் வந்த கெட்ட சம்பவமாய் நினைத்துக் கொள்ள வேண்டும்.

அதை விட்டு,முகத்தைச் சுருக்குவதும் , தொடர்புகளைப் பலவீனப்படுத்துவதும், ஓகோ நீ அப்படியா? நான் இப்படி என்று மாற்றி மாற்றி விரோதத்தைப் பன்மடங்காக்குவதும் பொருள் பொதிந்த செயல்களாகத் தெரியவில்லை. நேற்று ஒன்றுமே நடக்காதது போல் இன்று நடந்து கொள்வதில் உள்ள பலன்கள் என்ன தெரியுமா?

நேற்றைய நிகழ்ச்சியில் தவறு நம்முடையதாக இருந்தால் அதை நாம் உணர்ந்து வருந்தியதாக ஆகும்.

தவறு அவர்களுடையதாய் இருந்தால் அதை நாம் மறந்து மன்னித்ததாக ஆகும்.

நேற்றைய சம்பவங்களில் தவறு கண்டு பிடித்துப் பல நாள் அதை மனதில் வைத்துக் கொண்டு விரோதப் பார்வை பார்த்தால் நம்முடைய எதிர்பார்ப்புத் தராசிற்கு நாமே மிஞ்ச மாட்டோம்.

லேனா தமிழ்வாணன்

# வறிய குடும்பங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

(கொழும்பு)

சிறுநீரக நோயினால் பாதிக் கப்பட்டுள்ளவர்கள் மற்றும் வறிய குடும்பங்களுக்காக, அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம் பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற அமைச் சரவை தீர்மானங்களை அறிவி க்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணா திலக இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொண்டாடப்படும் தேசிய வீட மைப்பு வாரத்தை முன்னிட்டு இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளதாவும், இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இணைந்து முன்வைத்த கூட்டு யோசனைக்கு, அமைச்சர வையின் அங்கீகாரம் கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரி வித்தார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-08.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.63 | 147.29 |
| பிரிட்டன் | பவுண்ட் | 208.12 | 215.36 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 162.27 | 168.63 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.85 | 153.97 |
| கனடா | டொலர் | 111.95 | 116.54 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 105.88 | 110.76 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.72 | 109.74 |
| இந்தியா | ரூபா | 2.1820 | ------- |
| சீனா | யுவான் | 22.1908 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5638 |
| குவைத் | டினார் | 483.7050 |
| ஓமான் | ரியால் | 378.5468 |
| கட்டார் | ரியால் | 40.0390 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8630 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6825 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 300 | 170 | 240 | 220 | 220 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 1000 | 600 | 800 | 600 | 600 |
| தக்காளி | 740 | 300 | 170 | 280 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 70 |
| கோவா | 180 | 200 | 140 | 200 | 160 | 200 |
| கரட் | 200 | 400 | 150 | 160-250 | 240 | 200 |
| பூசணி | 60 | 100 | 50 | 80 | 60 | 60 |
| புடோல் | 100 | 200 | 100 | 80 | 120 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 50 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 150 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 70 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 240 | — | 170 | 300 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 120 | 130 | 150 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 90 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 130 | 240 | 240 | 250 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200-240 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 110 | — | 190 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 200 | 200 | 200 | 400 |
| போஞ்சி | 300 | 400 | 200 | 240 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 150 | 200 | 200 | — |
| கீரை - 1பிடி | 40 | 50 | 30 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 300 | 200 | 220 | 300 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 25-35 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | — | 160 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 280 | — | 300 |
| முள்ளங்கி | 100 | 200 | — | 160 | — | 150 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 20 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 150 | — | 80 | 120 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிங்களத் தீவிரவாதக் கட்சியுடன் சந்திரிகா கூட்டு 200

சந்திரிகா அரசுக்கு அளித்து வந்த ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்ட தால் அவரது அரசு மெஜாரி ட்டு இழந்தது. இதைத் தொடர்ந்து ஜனதா விமுக்தி பெரமுனா (சிங்கள தீவிரவாத கட்சி) ஆதரவைப் பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டார். இதனால் தமிழர் களின் உரிமை பறிபோயிற்று.

### நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

ஜனாதிபதி சந்திரிகா தலை மையிலான மக்கள் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்டதால் அவ ரது அரசு மெஜாரிட்டியை இழந்தது. இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சந்திரிகா அரசு மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தது.

இதனால் ஏற்பட்ட நெருக் கடியைச் சமாளிக்க பாராளு மன்றம் செயற்படுவதை 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை 2 மாதங் களுக்குச் சந்திரிகா முடக்கி வைத்தார். மேலும் எதிர்க் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசு அமைக்க அவர் முயற்சி செய்தார். ஆனால் அது தோல்வியடைந்தது.

### ஜனதா விமுக்தி பெரமுனா ஆதரவு

இதைத்தொடர்ந்து ஜனதா விமுக்தி பெரமுனா என்ற இடதுசாரி கட்சியின் ஆதரவு டன் தனது ஆட்சியைத் தக்க வைக்க சந்திரிகா பேச்சு நடத்தினார்.

அப்போது சந்திரிகா அரசு க்கு ஆதரவு அளிக்க ஜனதா விமுக்தி பெரமுனா சில நிபந்தனைகளை விதித்தது.

தமிழர்கள் அதிகம் வசிக் கும் மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங் கக்கூடாது. புதிய அரசியல் சட்டம் தொடர்பான பொது வாக்கெடுப்பை ரத்து செய்ய வேண்டும். தனியார் மயமா கும் கொள்கையைக் கைவிட வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகள் அந்தக்கட்சி விதித்தது. மேலும் அமைச்சர் களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். முடக்கி வைக்கப்பட்ட பாராளுமன்ற த்தை கூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளையும் அந்தக் கட்சி விடுத்தது. இதைச் சந்திரிகா ஏற்றுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து சந்தி ரிகா அரசுக்கு ஆதரவு தெரி விக்க ஜனதா விமுக்தி பெர முனா முன்வந்தது. இருதரப் பினருக்கும் இடையே இது தொடர்பான உடன்பாடும் ஏற்பட்டது.

### பெரும்பான்மை (மெஜாரிட்டி) கிடைத்து

பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினாகளைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுனா ஆதரவு அளித்ததைத் தொட ர்ந்து பாராளுமன்றத்தில் சந்திரிகா அரசின் பலம் 119 ஆக உயர்ந்தது.

அதாவது பாராளுமன்ற த்தில் அவருக்கு பெரும் பான்மை கிடைத்து விட்டது.

### விடுதலைப்புலிகள்

தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கக்கூடாது என்று எதிர்க்கும் கட்சிதான் ஜனதா விமுக்தி பெரமுனா தற்போது இந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்து விட்ட தால் விடுதலைப்புலிகளுடன் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை பாதிக்கப்படுமா என்று ஜனாதிபதி சந்திரிக்கா விடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த சந்திரிகா கூறியதாவது,

விடுதலைப்புலிகளுடன் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. ஜனதா விமுக்தி பெரமுனாவுடன் அது சம்பந்தமாக எதுவும் பேசப் படவில்லை.

### பாதிப்பு இல்லை

ஜனதா விமுக்தி பெரமுனா வுடன் மக்கள் கூட்டணி செய்து இருக்கும் ஒப்பந்தம் எங்கள் திட்டத்துக்கு தடை யாக இருக்காது.

சிறுபான் மையோர் உரி மைக்கு அரசியல் சட்ட ரீதியில் ஏற்பாடுகளைச் செய்ய அது இடையூறாக இருக்காது. அதேபோல் நாட்டின் பொருளாதாரத் தையும் இந்த ஒப்பந்தம் பாதிக்காது.

நிரந்தரமில்லாத அரசுடன் பேச்சு நடத்தமாட்டோம் என்று விடுதலைப் புலி கள்தான் பேச்சுவார்த்தையை நிறுத்தி வைத்துள்ளனர். அரசியல் சட்ட திருத்தத்து க்காக அனைத்துப் பிரிவின ருடன் விரிவான பேச்சு நடத்தும் திட்டத்துக்கு ஜனதா விமுக்தி பெரமுனா சம்மதி த்து உள்ளது. எனவே சிறு பான்மையோர் எந்த விதத் திலும் பயப்படத் தேவை யில்லை.

இவ்வாறு சந்திரிகா கூறி னார்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோ சகர் பாலசிங்கம் கூறிய தாவது,

### புனிதத்தன்மை அற்றது

சந்திரிகாவின் மக்கள் கூட்டணி அரசுக்கும் ஜனதா விமுக்தி பெரமுனாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் புனிதத் தன்மை அற்றது ஆகும்.

இந்த ஒப்பந்தம் சமர சப்பேச்சு வார்த்தை நடத்த முடியாத நிலையை ஏற்படுத் தியுள்ளது.

ஒப்பந்தத்தின் காரணமாக சமரசப் பேச்சுவார்த்தை பாதிக்கப்பட மாட்டாது என்று சந்திரிகாவும் இலட் சுமண் கதிர்காமரும் கூறி இருப்பது முட்டாள்தன மானது ஆகும்.

அதிகாரப் பகிர்வு தொட ர்பாக. ஓர் ஆண்டு காலம் பேச்சு வார்த்தை எதுவும் நடத்தக் கூடாது என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டு ள்ளது.

### நிபந்தனை

அப்படி இருக்கும் போது சமரச முயற்சியில் ஈடு படுவதில் அர்த்தம் இல்லை.





(தொடரும்)

# யாழில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவை மதிப்பீடு தொடர்பில் விசேட ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவை மதிப்பீடு தொடர்பான விசேட ஒன்றுகூடல் நேற்றையதினம் நாவலர் வீதியில் உள்ள வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வு பெற்ற போராளிகள், யுத்தத்தில் பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிரிழந்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டம் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு தனது அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டில் வடக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 43 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

அந்த வகையிலே மீதமாக உள்ள பதிவு செய்த குடும்பங்களுக்கும், கடந்த ஆண்டு பதிவு செய்யத் தவறிய நிலையில் இந்த ஆண்டு பதிவுகளைச் செய்த குடும்பங்களுடன் ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து இறந்த அங்கத்தவர்களின் குடும்பங்களின் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் இவ்வருடம் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 100 குடும்பங்களைத் தெரிவு செய்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகளின் வாழ்வாதாரத் தேவைகள் தொடர்பாக அவர்களது தெரிவிற்கான விசேடகூட்டம்வடக்குமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, குறிப்பிட்ட நிபந்தனைகள் அடிப்படையில் விசேட தெரிவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கான தேவை மதிப்பீடு தொடர்பான விசேட ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இவ் விசேட ஒன்றுகூடலில் கத்தோலிக்க அருட்தந்தை, இந்துமத குருக்கள், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், இ.ஆனோல்ட், க.விந்தன், பா.கஜதீபன், ச.சுகிர்தன், க.சர்வேஸ்வரன், யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் கி.க.சிற்றம்பலம், கிராம அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்.கரவெட்டி பிரதேச சபையினரால் நெல்லியடி பொதுச்சந்தை நேற்று முன்தினம் துப்புரவாக்கப்பட்டது. கரவெட்டி பிரதேச செயலாளர் அ.வினோராஜ் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் கரவெட்டி பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



யாழ். நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலுள்ள பலாமரத்தில் காய்த்துள்ள பலாப்பழத்தின் மேல் பலாமரத்துளிர் முளைத்துள்ளது. இதனை அப்பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட 7000இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 7 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் இவர்கள் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும் முழுமையான அதிகாரம் கட்சியின் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே இருப்பதாகவும் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-10)

# நாய்க் கடிக்குள்ளான நபர் வைத்தியசாலையில் அனுமதி

கட்டாக்காலி நாயினால் கடியுண்டவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்திகைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

,படுகாயத்திற்குட்பட்ட அவ்வர்த்தகர் வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (இ-5-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 745

Search for people places and things Nagendram Home

**ரதி**




**நிஷாந்தன்**



**சிவா**




**சர்மிலா**




**சந்துரு**



**தர்மா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கு, கிழக்கை இணைத்து தமிழர், முஸ்லிம்கள் அரசியல் அதிகாரம் கோருவது பிரிவினையாகாது!



தென்னிலங்கை முஸ்லிம்களின் சிரேஷ்ட அரசியல் தலைவர் மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் நினைவுப் பேருரையில் எதிக்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆற்றிய உரை சிறுபான்மையினரின் அரசியல் வரலாற்றை புடம் போட்டுக் காட்டியுள்ளது.

கிழக்கு இலங்கையில் முஸ்லிம்களுக்கான தனித்துவ அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னரான (1986) காலப்பகுதியில் தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளே கிழக்கு முஸ்லிம் களையும் கையாண்டு வந்தனர். 1985 இல் கிழக்கில் தமிழ்,முஸ்லிம் கலவரங்கள் இடம் பெறும் வரை தமிழர் சார்ந்த நிலைப்பாடுகளையும் தமிழ்த்தலைமைகளின் வழிகாட்டல்களையுமே முஸ்லிம்கள் பின்பற்றி வந்தனர்.

இக்காலப் பகுதியில் பாக்கீர் மாக்கார், எம்.எச்.முஹமட், ஏ.சி.எஸ்.ஹமீத் போன்ற மேற்கு முஸ்லிம் தலைமைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய மொழி வாழ்விட அரசியல் உரிமைப் போராட்டங்களை தங்கள் கட்சி சார்ந்த நலனோடுதான் நோக்கினர். இப் போராட்டத்திற்கு கிழக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்கியதன் நியாயத்தை மேற்கு முஸ்லிம் தலைமைகள் புரிந்து கொள்ளாது இருந்தனர்.

முஸ்லிம்களின் மொழி, வாழ்வு, கல்வி, தொழில் வாய்ப்புக்கான போராட்டத்தையும் சேர்த்ததாக வடக்கு, கிழக்குப் போராட்டம் இருந்தது. இதனால் இப் போராட்டத்தில் இருந்து கிழக்கு முஸ்லிம்களை வேறுபடுத்தும் மேற்கு முஸ்லிம் தலைமைகளின் முயற்சிகள் 1985 இனக்கலவரம் இடம்பெறும் வரை பலனளிக்காது போயின.

இக்காலப் பகுதிகளில் இடம் பெற்ற அரசு போராட்ட அமைப்புக்கள் சார்பான பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் அமைச்சர்கள் அரசாங்க சார்பாக கலந்து கொண்டனரே தவிர முஸ்லிம்கள் சார்பாக பங்கேற்கவில்லை.

இத்தனைக்கும் 1985 தமிழ், முஸ்லிம் கலவரங்கள் முஸ்லிம் தனித்துவக் கட்சிகளின் தோற்றம் வரை தமிழர் தரப்பு சார்பான போராட்ட அமைப்புக்களின் கருத்துகளுடன் முஸ்லிம் கள் இணங்கச் சென்றதே வரலாறு.

இந்த வரலாற்று யதார்த்தங்களை மீள உணர்த்தும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இந்த நினைவுப் பேருரையில்

**தமிழ்த்தலைமையுடன் முஸ்லிம்கள் பேசுவது காலத்தின் கட்டாயம்.**

உரையாற்றினார். மேற்கு முஸ்லிம் தலைமைகள் வடக்கு, கிழக்கு மாகாண தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை புரிந்து கொள்வது காலத்தின் தேவையென குறிப்பிட்ட அவர் கிழக்கு முஸ்லிம் தலைமைகளின் தேவைகள் உணர்வுகளை இதுவரை மேற்கு தலைமைகள் அடையாளம் காணாதுள்ளமை வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தேசியத்தை பலவீனப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

உண்மையில் மிக ஆழமான இந்த உரையில் இருந்து இலங்கை முஸ்லிம்கள் பலதை உணர வேண்டியுள்ளனர்.

கிழக்கு முஸ்லிம்களதும் மேற்கு முஸ்லிம்களதும் பிரச்சினைகள் ஒரே வடிவிலானதாக இருந்தால் அவ்விரு முஸ்லிம் தலைமைகளும் ஒன்றித்து பயணித்திருக்கும்.

கிழக்கில் தனித்துவ கட்சிகளின் தோற்றம் மேற்கு முஸ்லிம்களை கிலி கொள்ள வைப்பதும் அல்லது முஸ்லிம் தனித்துவக் கட்சிகளை மேற்கு முஸ்லிம்கள் கண்டு கொள்ளாதுள்ளமையும் இந்த யதார்த்தத்திலேயே ஆகும்.

எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து தமிழ்,முஸ்லிம் தேசியங்களுக்கு மாகாண தன்னாட்சி அதிகாரங்களை வழங்குவது அல்லது அவ்வாறான உரிமைகளை மக்கள் கோருவது எந்த வகையிலும் பிரிவினையாகாது.

திருகோணமலையில் கந்தளாய்க் குடியேற்றம், அம்பாறையில் கல்லோயாக் குடியேற்றம் என்பன தமிழ்மொழித் தாயகத்தின் நிலங்களை துண்டாடும் முயற்சிகளே. இந்தப் புவியியல் உணர்வு ஒற்றுமையுமே வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிக்கான உரிமையையும் தனி அந்தஸ்தையும் கோரி நிற்கின்றது. துரதிர்ஷ்டவசமாக கிழக்கில் நடந்த அசம்பாவிதங்களால் தமிழர்களதும் முஸ்லிம்களதும் அபிலாஷைகளில் முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டு தனித்தனி தமிழ்,

**சம்பந்தனின் உரை உணர்த்தும் யதார்த்தம்**

முஸ்லிம் தலைமைகள் தோன்றியுள்ளன. இவ்வாறான நிலையில் இவ்விரு சமூகங்களினதும் தலைமைகளுக்குள்ள சந்தேகங்கள் இடைவெளிகளைப் போக்க வேண்டியுள்ளது.

எனவே தங்களைத் தேசியங்களாக தனித்துவப்படுத்த முடியாதுள்ள அல்லது தவறியுள்ள மேற்கு முஸ்லிம்களும் தமிழர்களும் சம்பந்தன் ஐயாவின் உரையிலிருந்து பலவற்றை அவதானிக்க வேண்டியுள்ளது.

வடக்குக் கிழக்கில் தனி மாகாணம் கோருகிறார்கள் என்பதற்காக மலையகத்திலோ மேற்கிலோ வேறு வேறு கோஷங்களையும் கோரிக்கைகளையும் முன் வைப்பது உரிமைக்காக போராடிய, போராடும் தமிழ், முஸ்லிம் மக்களின் வயிற்றில் அடிக்கும் கதையாகவே மாறிவிடும்.


இதனால்தான் சம்பந்தன் ஐயா முஸ்லிம்கள் தங்களது விகிதாசாரத்திற்கு ஏற்ப மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்க வேண்டும் . என வலியுறுத்தியுள்ளார்.

மேற்கு முஸ்லிம்களுக்கான அறிவுரையாகவே இது சொல்லப்பட்டு இருக்கும். தேசிய கட்சிகளில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளருக்கு மேற்கு முஸ்லிம்கள் வாக்குகளை அளித்து பிரதிநிதிகளைக் காப்பாற்றுவதே அவர்களுக்கென்று உள்ள அவசியமான தேவையாகும்.

இது மக்களை இன ரீதியாகத் தூண்டும், சிந்திக்கவும் வைக்கும் கருத்தல்ல என்பதை உணர்ந்து கொள்ளல் அவசியம். தங்களுக்குள்ள வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்தி சமூகப் பிரதிநிதிகளை விகிதாரசாரத்திற்கு ஏற்ப தக்க வைப்பதன் மூலம் மாத்திரமே மேற்கு முஸ்லிம்கள் தங்கள் சமூகத்தை பிரகாசிக்கச் செய்யவும் பிரதிபலிக்கச் செய்யவும் முடியும். இந்த இலகுவான காரியத்தைக் கூட செய்யாமல் கிழக்கில் கரையோர மாவட் டமோ தனியலகோ முஸ்லிம்கள் கோரும் போது தங்களுக்கும் தரவேண்டும் என மேற்கு முஸ்லிம்கள் கோருவது அல்லது தங்களது கட்சிகளின் தேசிய வாத சிந்தனைகளுக்கேற்ப அறிக்கைகளை வெளியிடுவது மேற்கு, கிழக்கு முஸ்லிம் தலைமைகளின் புரிந்துணர்வுகளை தூரமாக்கவே செய்யும். பிரதேச வாத சிந்தனைகள் ஒரு இனத்தின் ஒற்றுமைக்கு ஆபத்தாகும் என்பது இவ்விடயத்தில் இரண்டாம் பட்சமே. காயம் உள்ள காலுக்கே சிகிச்சை செய்ய வேண்டும். மாறாக காலில் காயம் இருந்தால் பரவாயில்லை, கையில் மருந்து கட்டுவோம். கையும் உடம்பில் ஒரு அங்கம் தானே என்று வாதிடுவது அறிவுடைமையாகாது. எனவே தமிழ் மொழித் தேசியத்தில் வாழும் முஸ்லிம்களுக்கே பிரச்சினைகள் வரும். இவற்றைப் புரிந்துணர்வுடன் தீர்த்து வைக்க தமிழ் தலைவர்களுடனே பேச வேண்டும். இவ்வாறு பேசுவதைக் காட்டிக் கொடுப் பாகவோ, கைவிட லாகவோ மேற்கு முஸ்லிம் தமிழர்கள் கருதக் கூடாது.

இதை த் தான் பாக்கீர் மாக்கார் நினைப் பேருரையில் எதிக்கட்சித் தலைவர் நினைவூட்டியிருப்பார்.

ஏ.ஜீ.எம்.தௌபிக்




யாழ். அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய 1008 சங்காபிஷேகப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. (படங்கள்–அராலிச் செய்தியாளர்)

# உலகப் பெருங்கடல்கள் நாளான நேற்று பேருவளையில் மீனவர்கள் போராட்டம்

(கொழும்பு)


கொழும்பு காலி பிரதான வீதியின் களுத்துறை பேருவளை பகுதியில் மீனவர்கள் வீதிமறியலில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று புதன்கிழமை முற்பகல் முதல் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன் காரணமாக வீதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீனவப் பிரச்சினைக்குத் தீர்வு தரக்கோரி வலியுறுத்திய போதிலும், அரசாங்கத்திடம் இருந்து சமிக்ஞை எதுவும் கிடைக்கவில்லை என்றகாரணத்தை சுட்டிக்காட்டியே இந்தப் போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# டெங்கை கட்டுப்படுத்தும் தடுப்பூசி மருந்தை பிரான்ஸிலிருந்து தருவிக்க நடவடிக்கை



டெங்குநோயை கட்டுப்படுத்துவதற்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் தடுப்பூசி மருந்தை பிரான்சிலிருந்து தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சபையில் தெரிவித்த சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் டெங்கு நோயை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவணி எம்.பியான கனக ஹேரத் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை ஆயிரத்து 563 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் 29 ஆயிரத்து 777 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்ததோடு 60 உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்தன.

2014 ஆம் ஆண்டு டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 502 ஆக காணப்பட்டதோடு 97 உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

எனினும் கடந்த வருடத்தில் நாம் முன்னெடுத்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளால் பல பாதிப்புக்களை குறைக்க முடிந்துள்ளது.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் பகுதிகளை அடையாளம் கண்டு அழிக்கும் நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது பாடசாலைகள் மற்றும் பொது மக்களுக்கு டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இவை வெற்றியளித்திருப்பதாலேயே பாதிப்பு எண்ணிக்கையை குறைக்க முடிந்துள்ளது.

டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி மருந்து பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரேசில், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் இந்த தடுப்பூசி மருந்தையே பயன்படுத்துகின்றன. இதனை நாட்டுக்குள் கொண்டுவந்ததும் டெங்கு நோயை முற்றாக ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# யாழிலுள்ள முஸ்லிம் மக்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சவுதி அரசாங்கத்தால் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட பேரீச்சம்பழம் யாழ். மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என யாழ். மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களில் அங்கம் வகிக்கும் யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது .

இவ் விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஜமால் மொகைதீன் , செயலாளர் சுவர்ஹஹான் ஆகியோர் தங்களின் அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் உள்ள பல மாவட்டங்களுக்கு பேரீச்சம்பழம் விநியோகிக்கும் நடவடிக்கை புனித நோன்பு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் வாழ்கின்ற யாழ். மாவட்டத்திற்கு சுயநலமிக்க தனிநபர்களின் ஊடாக விநியோகம் செய்யப்படவுள்ளதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அற்ற இம் மாவட்டத்தை அமைச்சர் ஒருவரும் வடமாகாண சபை உறுப்பினர் ஒருவரும் இணைந்து பதியப்படாத ஒரு அமைப்பின் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நடவடிக்கை குறித்து மக்கள் விசனத்தை தெரிவித்துள்ளனர்.

வழமையாக இச் சம்மேளனத்தின் ஊடாகவே பேரச்சம் வழங்கல்கள் நடைபெற்று வந்தன.

ஆனால் இம்முறை அரசியல் தலையீடு காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த கிழமை நாட்களில் முஸ்லிம் விவகார கலாசார அமைச்சர் ஹலீம் கட்சி அரசியலுக்கு அப்பால் பேரச்சம்பழ விநியோகம் சிவில் அமைப்புகளின் ஊடாக பள்ளிவாசல்களிற்கு வழங்கப்படும் என அறிவித்தார். எனினும் அவை நடக்கவில்லை.

இதனால் சம்மேளனம் வழங்கிய அதாவது ஜம்மியத்துல் உலமா ஊடாக வழங்கப்பட்ட கடிதம் நிராகரிக்கப்பட்டு மற்றுமொரு அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் சகல பள்ளிவாசல்களும் குறித்த பேரச்சம்பழங்களை பெற முடியாமல் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

இது தவிர மேற்குறித்த பேரச்சம்பழங்களை மீளவும் சம்மேளனத்தின் ஊடாகவோ யாழ் உலமா சபை கிளையின் ஊடாகவோ வழங்கினால்சகல பள்ளிவாசல்களுக்கும் கிரமமாக பேரச்சம்பழம் கிடைக்கும் என தெரிவித்துள்ளனர். (இ-4)

# செய்தித்துளிகள்

## மஹாகும்பாபிஷேக பெருவிழா

அகில இலங்கை யாழ். நல்லூர் நாவலர் வீதி மடத்தார்பதி பிரிய வாச ஸ்ரீ ராஜ மஹா சற்குரு ஸ்ரீ சீரடி சாயி நாத சுவாமியின் மந்திர் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெரும்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் உற்சவம் நடைபெறும்.(இ-5)

## 12 பேரைக் கொன்ற யானை அதிகாரிகளிடம் அகப்பட்டது

12 பேரை கொன்ற யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவாய - தேவகிரிகந்த பிரதேசத்தில் வைத்தே இந்த யானை பிடிபட்டுள்ளது.

குறித்த யானையானது அம்பேகமுவ, பலஹருவ, உனகந்த, வெஹரயாய, எத்திலிவெள, சிறிபுர ஆகிய பிரதேசங்களில் பல அட்டூழியங்களை புரிந்த யானை என்றும், குறித்த பிரதேசங்களில் 12 நபர்களை கொன்ற யானை என்றும் நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் பிரதி அமைச்சின் செயலகம் தெரிவித்துள்ளது. (இ-10)

## வைத்தியசாலையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பிரவுண்ஸ்வீக் தோட்டத்தை சேர்ந்த 49 வயது மதிக்கத்தக்க செல்வசுந்தரம் என்ற நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. (இ-10)

## மற்றுமொரு சிறுத்தை நேற்று சடலமாக மீட்பு

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் வெஞ்சர் பகுதியில் சிறுத்தைக் குட்டி ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நேற்றுக் காலை சிறுத்தைக்குட்டி ஒன்று இருப்பதைக் கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கியுள்ளனர்.

இதன் பின்னர, சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்ற பொலிஸார் சிறுத்தையின் சடலத்தை மீட்டுள்ளனர்.

இதேவேளை, சடலத்தை நல்லதண்ணி வனவிலங்கு காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாக நோர்வூட் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலும், இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதால் வன விலங்குகள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (இ-10)

## மௌனத்தைக் கலைக்க கடலில் பாய்ந்த மாணவி

தன்னுடைய காதலன், சுமார் இரண்டு மாதகாலமாக தன்னுடன் கதைக்காமல் விட்டமையால், காதலியான மாணவியொருவர், பாடசாலைச் சீருடையிலேயே கடலில் குதித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

எனினும், அந்நேரத்தில் கடற்கரையோரத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார், அம்மாணவியைக் காப்பாற்றியுள்ளனர். இந்தச் சம்பவம், காலி, திக்வெல்ல பகுதியிலுள்ள கடலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 7.45இற்கு இடம்பெற்றுள்ளது. (இ-10)

## சட்டவிரோத மீன்பிடி சம்பூரில் 9பேர் கைது

திருகோணமலை மாவட்டம் சம்பூர் கடல் பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 9 உள்நாட்டு மீனவர்களை கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய படகு, தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலை, சுழியோடும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள், கைப்பற்றப்பட்ட பொருட்களும் சம்பூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இ-10)

## பெரஹராவை நடத்துவதில் சிக்கல்

வளர்ப்பு யானைகள் பற்றாக்குறை காரணமாக கண்டி தலதா மாளிகை பெரஹராவை நடத்துவதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பஸ்நாயக்க நிலமே சங்கத்தின் தலைவர் கெமுனு வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## ஐந்து ஆண்டுகளுக்குப்பின் பெற்றோருடன் சிவாஜி சந்திப்பு 179

...அதில் என்.எஸ்.கே.யின் மகனாக காமெடி வேடத்தில் நடிப்பதற்கு ஒரு பையன் தேவைப்பட்டார். படக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் சிவாஜியையும் காக்கா ராதா கிருஷ்ணனையும் அழைத்துச் சென்றனர். இந்த இருவரில் அவர்கள் தெரிவு செய்தது காக்கா ராதா கிருஷ்ணனைத்தான்.

காக்கா ராதா கிருஷ்ணனுக்குத்தான் இயற்கையாகவே கமெடியான முகம் இருக்கின்றது என்று அவர்கள் கூறினார்கள். சிவாஜிகணேசனை நாடகக் கம்பெனியில் கொண்டுபோய் விட்டார்கள்.

### பெற்றோருடன் சந்திப்பு

சிவாஜிக்கு 12 வயதான போது நாடகக் குழுவினர் கோவையிலிருந்து பொல்லாச்சிக்குச் சென்று முகாமிட்டனர். சிவாஜிக்கு பெற்றோரைப்பார்க்க வேண்டும் என்று ஆவல் அதிகரித்தது. தீபாவளிக்காவது என்னை ஊருக்கு அனுப்பி வையுங்கள் என்று கம்பெனி நிர்வாகிகளிடம் கெஞ்சினார். அவர்கள் மனம் இரங்கி சிவாஜியை அனுப்பி வைத்தனர். வீட்டுக்குப் போனதும் சிவாஜி முதலில் பார்த்தது தம்பி சண்முகத்தையும் தங்கை பத்மாவதியையும்தான்.

சிவாஜி கணேசன் குடும்பத்தைப் பிரிந்து நாடகக் கம்பெனியில் சேர்ந்த போது மூன்று அண்ணன்கள் மட்டுமே இருந்தனர். அவர்களில் இருவர் இறந்து போய் விட்டார்கள். தான் நாடகக் கம்பனியில் சேர்ந்த பின்பு பிறந்த தம்பி சண்முகத்தையும் தங்கை பத்மாவதியையும் அப்போதுதான் முதன் முதலாக சிவாஜி பார்த்தார். பாசத்தோடு தழுவிக் கொண்டார்.

பல ஆண்டுகளுக்குப்பின் சிவாஜியைப் பார்த்த தாயார் ராஜாமணி அம்மாள் கண்ணீர் விட்டு அழுதாள்.


பிறகு தந்தையையும் அண்ணனையும் சிவாஜி சந்தித்தார். சிறிது நேரம் அவர்களால் பேசவே முடியவில்லை.

அந்தத் தீபாவளியைப் பெற்றோருடனும் அண்ணன், தம்பி, தங்கையுடனும் கொண்டாடி மகிழ்ந்தார் சிவாஜி.

### ராதா வருகை

சில நாட்கள் குடும்பத்துடன் தங்கியிருந்தார் சிவாஜி.

ஒரு நாள் எம்.ஆர்.ராதா ஜட்கா வண்டியில் அங்கு வந்தார்.



தம்பி சண்முகம், அண்ணன் தங்கவேலு ஆகியோருடன்.

சில நாட்கள் உங்கள் வீட்டில் தங்கப் போகிறேன் என்றார்.

என்ன அண்ணே விஷேசம் என்று சிவாஜி விசாரித்தார்.

நான் பொன்னுசாமிப் பிள்ளை கம்பெனியில் இருந்து விலகிவிட்டேன் சொந்தமாகக் நாடகக் கம்பெனி ஆரம்பிக்கப் பேவாகிறேன். நீயும் அதில் சேர வேண்டும் என்றார்.

சிவாஜிக்கு குழப்பம் ஆகிவிட்டது. தனக்கு ஆதரவு தந்து நடிப்பு கற்றுக்கொடுத்த கம் பெனியை விட்டு விலகுவதா? என்று யோசித்தார்.

அதே சமயம் ராதாவின் பேச்சை தட்டவும் முடிய வில்லை. நீண்ட மனப் போராட்டத்திற்குப் பின் ராதாவுடம் செல்ல முடிவு செய்தார்.

இது பற்றித் தன் தாயாரிடம் கூறினார். ஏம்பா பழைய கம்பெனியை விட்டுப் போகிறேன் என்கிறாயே சரியாக இருக்குமா என்று தாயார் கேட்டார். நான் ராதா அண்ணனை நம்புகிறேன். அண்ணன் ஏதா வது நல்லது செய்வார் என் றார் சிவாஜி.

எம்.ஆர்.ராதாவும் நான் பையனை மெட்ராஸ் கூட்டிக் கொண்டு போகிறேன். கட்டாயம் நல்ல எதிர்காலம் ஏற்படுத்திக் கொடுப்பேன் என்று ராஜாமணி அம்மாளிடம் கூறினார்.



தங்கை பத்மாவதியுடன்

ராதாவுடன் சென்னைக்குப் புறப்பட்டார் சிவாஜி. அவர் சென்னையைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை.

சென்னை ஜாஜ் டவுனில் தனக்குத் தெரிந்த ஒருவர் வீட்டில் சிவாஜியைத் தங்க வைத்தார். ராதா நாடகக்கம்பெனிக்கான உடைகள், சீன்கள் போன்றவற்றைச் சேகரித்தார்.

சிவாஜியை ஒரு நாள் ரிக்ஷாவில் ஏற்றி ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருமாறு அனுப்பினார். சிவாஜி அதிசயத்தோடு சென்னையைச் சுற்றிப் பார்த்தார்.

(தொடரும்)

# அணுசக்தி கூட்டமைப்பில் இந்தியா அமெரிக்கா ஆதரிக்கும் - ஒபாமா



அணுசக்தி விநியோக நாடுகளின் கூடடமைப்பில் (என் எஸ் ஜி) இந்தியா உறுப்பினராவதை அமெரிக்கா ஆதரிப்பதாக பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திபின்போது அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமா அறிவித்தார்.

என்எஸ்ஜி அமைப்பில் இந்தியா உறுப்பினராவதை சீனா எதிர்த்து வரும் நிலையில், உலக வல்லரசான அமெரிக்காவின் ஆதரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், கடடார், சுவிட்சர்லாந்து நாடுகளைத் தொடர்ந்து, அமெரிக்காவில் பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தலைநகர் வோஷிங்டனுக்குச் சென்ற பிரதமர் மோடி வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்துப் பேசினார். இந்த பேச்சுவார்த்தை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

இதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா செய்தியாளர்களிடம் கூறியதாவது,

எனது நண்பர் மோடியை ஓவல் அலுவலகத்தில் மீண்டும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆக்கபூர்வ அணுசக்தி துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். இணைய வெளி பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளும் இணைந்து செயற படுவது என நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இந்தியாவின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அணுசக்தி தொழில்நுட்பம் தேவைப்படுகிறது. ஆகையால், அணுசக்தி விநியோகக் கூட்டமைப்பில் (என்எஸ்ஜி) இந்தியா உறுப்பினராவதை அமெரிக்கா ஆதரிக்கிறது. இந்தியா இளம்தலைமுறையினர் கொண்ட நாடு என்பதையும், அந்த இளம்தலைமுறையினர் எத்தகைய திறமையை கொண்டவர்கள் என்பதையும் அமெரிக்கா அறியும். எனவே எதிர்காலத்திலும் இருநாடுகளும் இணைந்து செயற்படும். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு உள்ளது என்றார் ஒபாமா.

கடந்த ஆண்டு இந்திய குடியரசு தின விழா கொண்டாட்டத்துக்கு தலைமை விருந்தினராக மோடி தன்னை அழைத்ததற்கும், அந்த விழாவில் தனக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்கும் ஒபாமா மகிழ்ச்சி தெரிவித்தார். (இ-10)

# ஆஸி தஸ்மானிய மாநிலத்தில் கரைபுரண்டோடும் வெள்ளம்





அவுஸ்திரேலியாவின் தென் பகுதியில் அமைந்துள்ள தஸ்மேனியா மாநிலத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையினால், பெருக்கெடுத்துள்ள வெள்ளம் நேற்று புதன்கிழமை உச்சக்கட்டத்தை அடைந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், தஸ்மானியாவில் கரை புரண்டோடும் வெள்ள அனர்த்தத்தினால் நாட்டின் மிகப் பழைமையான நகரமான Launceston அதிகளவான சேதங்களை எதிர்கொள்ளும் அபாயம் காணப்படுவதாக எச்சரித்துள்ளது.

தொடரும் வெள்ள அனர்த்தத்தினால் Launceston நகரில் இருந்த சுமார் மூவாயிரம் மக்கள் முன்னெச்சரிக்கையாக அங்கிருந்து வெளியேறி, பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர்.

அப்பகுதியில் வெள்ளத்தில் சிக்குண்டுள்ள மக்களை தொடர்ந்தும் பாதுகாப்பாக வெளியேற்றும் பணிகளில், மீட்புக் குழுவினர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை கிழக்கு கடற்கரைப் பகுதிகளை ஊடறுத்த சூறாவளியினால் நால்வர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.




இவ்வாரம் அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் தொடரும் சூறாவளியுடனான் பலத்த காற்று மற்றும் இராட்சத அலைகளின் எழுச்சி ஆகியவை காரணமாக கிழக்கு கரையோரப் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில், தற்போது தென் பகுதியில் அமைந்துள்ள தஸ்மானியா மாநிலமும் வெள்ள அனர்த்தத்தினால் பலத்த பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது. (இ-10)

கலியுகத்தின் கொடுமைதனை
காணச் சகிக்க முடியவில்லை
–நீர்வை மணி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூதாட்டம் நடத்துவதற்கு சபை கூடிக்கொள்க...

பாண்டவர்களின் உரிமையை கொடுக்க மறுத்த துரியோதனன் பாண்டவர்களை சூதாட்டத்தில் தோற்கடிக்க திட்டமிடுகிறான்.

இதனை உள்நோக்கமாகக் கொண்டு சபை கூட்டப்படுகிறது.

சூதாட்டத்துக்கு பாண்டவர்களை வரவழைத்தால், காய் உருட்டும் தந்திரத்தால் அவர்களை தோற்கடிக்க முடியும் என சகுனி தன் மருமகன் துரியோதனனுக்கு உறுதியளிக்கிறான்.

கூடிய சபையில் பாண்டவர்களை சூதாட்டத்துக்கு வருமாறு துரியோதனன் அழைப்பு விடுக்க, மறுக்க முடியாத நிலையில் தருமர் சம்மதிக்கிறார்.

சூதாட்டத்தின் முடிவில் பாண்டவர்கள் வனவாசம் போகவேண்டியதாயிற்று.

14 ஆண்டுகள் வனவாசம் செல்வதால் ஒன்றுமில்லை என்று யாரேனும் நினைக்கலாம். ஆனால் அதுதான் இல்லை.

சகுனியின் சூழ்ச்சியால் துரியோதனன் பாண்டவர்களை சூதாட்டத்துக்கு வலிந்து இழுத்ததால்தான் துச்சாதனனின் குருதி பூசியே இக்கேசம் முடிப்பேன் என்று திரௌபதி சபதம் செய்கிறாள்.

அச் சபதமே குருசேத்திரப் போர் நடக்கவும் கௌரவர் சேனை அழியவும் காரணமாயிற்று.

அட! இப்போது இந்தக் கதை எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். அதற்கும் காரணம் உண்டு.

ஒருபோதும் கெடுதிக்காக சபை கூடுவது நல்லதல்ல. அவ்வாறு சபை கூடுமாயின் அது அழிவையே தரும்.

அழிவுக்காக சபை கூடுவதும், கூடுகின்ற சபையை அழிவை ஏற்படுத்துமாறு நகர்த்த முற்படுவதும் மிகப் பெரும் பாவச் செயல் ஆகும்.

இத்தகைய செயல்கள் பொதுவில் சூழ்ச்சியின் காரணமாக நடப்பதுண்டு.

அதாவது சபையைச் சாராதவர்கள் சபையில் இருக்கக்கூடிய ஒரு சிலரை ஆசை வார்த்தை காட்டி, தம்சூழ்ச்சி வலையில் வீழ்த்தி குழப்பத்தை ஏற்படுத்தச் செய்வதாகும்.

இத்தகைய குழப்பங்கள் மக்களை உய்ய விடாது; எந்தவித முன்னேற்றங்களுக்கும் களம் அமைக்க விடாது; மக்களை ஆளுகின்ற சபைகள் கூடுவது என்பது மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்க வேண்டும். அல்லது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கானதாக அமைதல் வேண்டும்.

எச்சந்தர்ப்பத்திலும் குழப்பதின் பொருட்டு சபையைக் கூட்டுவது; சபையை நடத்துவது; சபையை திசை திருப்புவது என்பன மக்களுக்குச் செய்கின்ற துரோகமாக அமையும்.

குழப்பங்களையும் சூழ்ச்சிகளையும் நோக்கமாகக் கொண்டு உறுப்பினர்கள் சபைக்கு வருவார்களாயின் அது சூதாட்டத்துக்கான சபையாகவே மாறும்.

சூதாட்டம் என்பது வெறும் சூதாட்டத்தை மட்டும் குறிப்பதல்ல. சூழ்ச்சி கொண்ட மனநிலையில் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எல்லாம் சூதாட்டம்தான்.

சபையைக் குழப்பும் எண்ணம்; அதற்கான திட்டமிடல்; சூழ்ச்சி செய்பவர்களின் தொடர்பு என அனைத்தும் சபையை சூதாட்டக்களமாக்கும்.

ஒரு சபை சூதாட்டக்களமானால் அதன் விளைவு என்னவாகும் என்பதை விளக்கவே துரியோதனன் ஆடிய சூதாட்டக்கதையை இங்கு கூறினோம்.

இனி, எங்கள் மக்களுக்கு நன்மை செய்ய சபை கூடுவதா? அல்லது சூதாட்டத்துக்காக சபை கூடுவதா? என்பதை எங்கள் உறுப்பினர்களே தீர்மானிக்கட்டும்.

## பதில் அதிபர்களின் தேசிய சம்மேளனம் கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில்

(கொழும்பு)

பாடசாலைகளில் கடமை அதிபர்களாக பணிபுரிபவர்களின் "அகில இலங்கை விது அபிமானி" அதிபர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பதில் அதிபர்களின் தேசிய சம்மேளனம' நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் பி.ப 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் டி.எம்.எல்.கே திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்மேளனத்தில் மலையகம், வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாடுபூராகவும உள்ள பாடசாலைகளில் கடமை அதிபர்களாக பணிபுரியும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட அதிபர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் கடமை அதிபர்களின் கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர் மற்றும் மாகாணங்களின் முதலமைச்சர்கள் ஆகியோர் சாதகமான நிலைப்பாட்டினை கொண்டுள்ளதாகவும் பதில் கடமை புரியும் சகல அதிபர்களையும் அன்றைய தினத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் கடமை அதிபர்களை www.principalassociation.lk எனும் இணையத்தளத்தில் தமது சுய விபரங்களை பதிவேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-9)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



முதலாம் நாள்- கொடியேற்றம் (09.06.2016)

வேழ முகத்து விநாயகனே...
உன் முன் உடைத்திட்ட
தேங்காய் சிதறல்கள்
கண்முன் உணவாகும் ஓர்சிலர்க்கு
மண்ணில் நல்லார்க்கருள் புரிவாய்
பொல்லாரை மாற்றிடுவாய்
எல்லோரும் போற்றும்படி...

மு.வைஷ்

## 2017 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை வவுச்சர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

டொலரின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் வரி அதிகரிப்பு ஆகியவற்றினால் சந்தையில் ஏற்பட்டுள்ள துணி வகைகளின் விலை மாற்றங்களை கருத்தில் கொண்டு, தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை வவுச்சர்களில் சேர்க்க கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமினால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த, அமைச்சரவை இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக பாடசாலை சீருடைத் துணிகளுக்குப் பதிலாக வவுச்சர்களை வழங்கும் முறை 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்ததை போன்று உரிய தரத்தைக் கொண்டதாக சீருடைத் துணிகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. மேலும் பாடசாலை சீருடைத் துணிக் கொள்வனவு தொடர்பில் ஏகபோக உரிமையினை ஒழித்தல் மற்றும் போக்குவரத்து, பொதியிடல், ஏற்றல் இறக்கல், களஞ்சியப்படுத்தல் மற்றும் தரப்பரிசோதனைகளுக்கான செலவினம் மற்றும் காலம் ஆகியன இப்புதிய முறையின் கீழ் மீதப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அதனடிப்படையில் கடந்தகால அனுபவங்களை கருத்தில் கொண்டு குறைபாடுகளை கட்டுப்படுத்தி, கடந்த ஆண்டில் துணி வகைகளின் பெறுமதிக்கு இணைவாக டொலரின் பெறுமதி அதிகரித்தல் மற்றும் வரி அதிகரிப்பிற்கமைய சந்தையின் துணி வகைகளின் விலைகள் மாற்றமடைந்துள்ளதால், விலைகள் அதிகரித்த பெறுமதிக்கு இணைவாக சீருடைத் துணிகளின் தற்போதைய சந்தை விலையுடன் ஒப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை வவுச்சர்களில் சேர்க்க கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசமினால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர மேலும் தெரிவித்தார். (இ-10)

## மாலைதீவு ஜனாதிபதியை கொல்ல முயற்சித்தவருக்கு மறியல் நீடிப்பு!

மாலைதீவு ஜனாதிபதி யாமீன்அப்துல்கயூமை கொலை செய்ய முயற்சித் தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரின் விளக்க மறியல் காலம் மீளவும் நீடிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவின் குற்றவியல் நீதிமன்றம் இந்த விளக்க மறியல் உத்தரவினை நீடித்துள்ளது.

ஸ்னைப்பர் துப்பாக்கி ஒன்றின் மூலம் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சித்தார் என சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

இந்நிலையில் இருபதாவது தடவையாகவும் குறித்த இலங்கையரின் விளக்க மறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லஹிரு மதுசங்க என்ற இலங்கையைச்' சேர்ந்த வியாபாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (செ-12)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

அளவெட்டி,பெருமாக்கடவை அருள்மிகுஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 11 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

தொல்புரம் விழக்கரை முத்து மாரியம்மன் தேவஸ்தான மஹோற்சவப் பெருந்திருவிழா நாளை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி 11 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-5-91)

## பரிசளிப்பு விழா

யாழ்.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணியளவில் பாடசாலையின் யோகர் சுவாமிகள் மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். வலயக் கல்வி முகாமைத்துவ கற்கைகள் உதவிப் பணிப்பாளர் ஏ.அகிலதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து கோரப்பட்ட விண்ணப்ப இறுதித் திகதி 2016.06.17 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளருடாக 2016.06.17 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில சங்கத்தானை, டச்சு றோட், வெள்ளாம் போக்கட்டி, கச்சாய் தெற்கு, பாலாவி, கெற்பெலி, அல்லாரை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில வலைப்பாடு, வேராவில், கிராஞ்சி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக் குளம் பிரதேசம், குருமன்காடு கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம், பசார் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தங்கத்தை இடுப்புக்குக்கீழ் அணியக்கூடாதது ஏன்?

தங்கமும் மகாலட்சுமியின் அம்சம். ஒரு அழகான பெண்ணை பார்த்தால் மகாலட்சுமி மாதிரி இருக்குன்னு சொல்வார்கள். அல்லது கல்யாணம் ஆகி ஒரு பொண்ணு வீட்டுக்கு வந்தால், அந்த மகாலக்ஷ்மியே வருகின்றாள் என சொல்வார்கள்.

ஏனென்றால், ஒரு பெண் ஒவ்வொரு வயதிலேயும் ஒவ்வொரு பருவத்தை எட்டுகிறாள். அந்த ஒவ்வொரு பருவத்திலும் மகாலட்சுமி ஒவ்வொரு இடத்தில் வாசம் செய்வாள். கன்னியாக இருக்கும் போது காதுக்கு கீழ்புறம், கழுத்து பகுதியிலும், திருமணம் ஆன பிறகு அவள் வைக்கும் நெற்றி பொட்டில், நேர் வகிட்டில் வாசம் செய்வாளாம் மகாலட்சுமி.

அதனால் தான் பெண்கள் தலை சீவாமல் இருக்க கூடாது. திருமணம் ஆனதும் நெற்றியில் பொட்டு வைக்க வேண்டும் என பெரியவர்கள் சொல்வார்கள். நல்ல மனமும், உதவி செய்யும் குணமும் கொண்ட எல்லா பெண்களும் எப்போதும் மகாலட்சுமியின் அம்சம் தான்.

அதேபோல் தங்கமும் மகாலட்சுமியின் அம்சம் தான். அதனால் தான் தங்கத்தை இடுப்புக்கு கீழ் அணியக்கூடாது என்பார்கள். அதேபோல் தங்க கொலுசு போடுவதும் தவறாகும்.

சிறிகுகன் சாதனை

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு-III ஓல்ட்கோல்ஸ் அணி வெற்றி




சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணி தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 20.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. டிலோஸன்-30, மதூஸன்-15, அஜித்-19 யனூஸன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணியைச் சார்ந்த சிறிகுகன் 9 இலக்குகளை கைப்பற்றினார்.

யாழ்.மாவட்டத்தில் சிறிகுகன் 9 இலக்குகளைக் கைப்பற்றி முதன்முதலில் இதுவரை காலமும் நடைபெற்ற ஐம்பது (50) பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஒரு போட்டியில் ஆகக்கூடிய இலக்குகளை (09) கைப்பற்றி ஓர் அதியுயர் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

இதுவரைகாலமும் ஜொலிஸ்ரார் அணியைச் சார்ந்த என்.பகீரதன் 2010ஆம் ஆண்டு 7 இலக்குகளைக் கைப்பற்றியமை சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



99 ஓட்டங்களை வெற்றியலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 9.2 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. மதூஸன்-50, மாதவரூபன்-22, நிரோஸன் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களைப்பெற்றனர். அஜித்-02 இலக்கினைக் கைப்பற்றினார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 7 ஆவது ஆண்டாக நடத்திவரும் தரவரிசைப் பட்டியலுக்கு ஓல்ட்கோல்ஸ் அணி 7.79 புள்ளிகளையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 1.18 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர் விடத்தல்தீவு ஐக்கியம் வெற்றி







உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன்" உதைபந்தாட்ட தொடரில் 31.05.2016 நடைபெற்ற போட்டியில் விடத்தல்தீவு ஐக்கிய வி.க.எதிர் த்து தெல்லிப்பழை நாமகள் வி.க மோதியது.

போட்டியின் 2 ஆவது நிமிடத்தில் விடத்தல்தீவு ஐக்கிய வி.க.கலிஸ்ரன் முதலாவது கோலினை அடித்து அசத்தினார். தொடர்ந்து இரண்டாவது பாதியில் 44 ஆவது நிமிடத்தில் ஜான்சன் இரண்டாவது கோலினை பெற விடத்தல்தீவு ஐக்கிய வி.க 2:0 என முன்னிலை பெற்றது. தொடர்ந்த ஆட்டத்தில் 54 ஆவது நிமிடத்தில் சுபாங்கன் நாமகள் வி.க சார்பாக முதலாவது கோலினை பதிவு செய்தார்.

ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கிய வி.க.வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக விடத்தல்தீவு ஐக்கிய வி.க.லிதர்சன் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க மூத்த உதைபந்தாட்ட வீரரும் கழக நலன் விரும்பியும் ஆகிய இராமச்சந்திரன் வழங்கி கௌரவித்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். ஐக்கியம் அணியை எதிர்த்து ஒலிம்பியா அணியும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன.

◆◆◆◆◆◆◆◆◆

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துஉடுப்பிட்டிநவஜீவன்ஸ்விளையாட்டுக்கழகம்மோதவுள்ளது.

◆◆◆◆◆◆◆◆◆

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நாமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வீனஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

# மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டி பருத்தித்துறை பிரதேச செயலகம் சம்பியன்









பிரதேச ரீதியிலான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகம் சம்பியன் ஆகியது. வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பிரதேச செயல கங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் கல்வியங்காடு ஞானபாஸ்கரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி செயலக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி பிரதேச செயலக அணி 14.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் 74 ஓட்டத்தினைப் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 3 விக்கெட்டினை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (கு)

## இரகசியமாக...

வையிட்டுள்ளனர்.

ஒல்லாந்தர் காலத்தில் 1850 ஆம் ஆண்டளவில் குறித்த கப்பலேந்தி மாதா ஆலயம் அப்பகுதியில் அமைக்கப்பட்டதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் அப்போதைய காலத்தில் குறித்த ஆலயத்தில் உள்ள மாதா சொரூபங்களில் காணப்பட்ட தங்கத்திலான பொருட்கள் பல குறித்த ஆலயத்தினுள் புதைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த ஆலய கட்டடம் சூழ்ந்த பகுதியை தொல்பொருள் திணைக்களம் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்ததோடு குறித்த பகுதியினுள் நுழைந்து அகழ்வு பணிகளை மேற்கொள்வதையும் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில் குறித்த பகுதிக்குள் கடந்த சில தினங்களாக சென்ற நபர்கள் சிலர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் அக்கிராம மக்கள் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை குறித்த பகுதிக்குச் சென்ற மன்னார் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்கள பொலிஸ் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் நேரில் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட குறித்த ஆலய கட்டடத்தின் உள் பகுதியில் சுமார் 8 அடி வரையில் பள்ளம் தோண்டப்பட்ட நிலையில் அருகில் தேசிக்காய் உள்ளிட்ட சில பொருட்களும் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் மீட்கப்பட்ட தடயப்பொருட்களை மீட்டுள்ள மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்த மன்னார் பொலிஸார், தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான குறித்த பகுதியில் மேற்குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நபர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவித்தனர். (செ-4)

## 44 விசாரணைகள்...

சிங்க நேற்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் 44 ஊழல் மோசடி விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நடத்தும் விசாரணைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குற்றங்கள் மற்றும் ஊழல்களை பார்க்கும்போது அவற்றை விசாரணை செய்யக் கூடிய பயிற்சி பெற்ற அதிகாரிகள் இருக்கவில்லை. இதனால், முதல் கட்ட அதிகாரிகள் குழுவுக்கு பயிற்சியளிக்க கால தாமதமானது.

இரண்டாவது அதிகாரிகள் குழுவிற்கு இலங்கையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி பெற்ற அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். 44 ஊழல் மோசடி விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் அதனை மீண்டும் ஆராய்ந்து சட்டத்தை செயற்படுத்த வேண்டும். சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தற்போது 6 வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன.

மீதமுள்ள விசாரணை அறிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பர்.

சில விசாரணைகளில் புதிய விடயங்கள் வெளியாகியுள்ளன. மேலும் தகவல்கள் தெரிய வரலாம்.

பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவும் விசாரணைகளை நடத்தி வருகிறது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்கப்படும் என பிரதமர் பதிலளித்துள்ளார். (செ-12)

## மக்களை பாது...

ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டியதன் தேவையை உணர்ந்து, அவற்றை அங்கிருந்து அகற்ற வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் வினவினார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே இராணுவ பேச்சாளர் மேறகுறித்தவாறு தெரிவித்தார். இராணுவ பேச்சாளர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

முப்படையினர், அதிரடிப் படையினர், பொலிஸார் அனைவரும் ஜாதி, மதம், குலம், பேதம் என பாகுபாடு காட்டி சேவை செய்வதில்லை. வடக்கு மக்கள் மாத்திரமல்ல, யாராக இருந்தாலும் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் யாரென்பதை இனங்கண்டு அவர்களை முதலில் பாதுகாப்பதே எமது நோக்கம். இவர்கள் கேட்பது போன்று இராணுவ முகாம்களை வடக்கிலிருந்து அகற்றிவிட்டு, அம்மக்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் நாம் எங்கிருந்து உதவுவது?

இதற்கு சிறந்த உதாரணம், அரநாயக்க மண்சரிவு. அரநாயக்க மண்சரிவு ஏற்பட்டபோது, கேகாலையில் இராணுவ முகாம் இருந்த காரணத்தாலேயே எம்மால் அங்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட முடிந்தது. அவ்வாறு ஒரு இராணுவ முகாம் அங்கு இருந்திருக்காவிட்டால், வேறு ஒரு இடத்திலிருந்து செல்லவேண்டும். அதற்கு சில விதிமுறைகள் உள்ளன. அவறறையெல்லாம் முடித்து அங்கு செல்லும்போது அதிக நேரம் செல்லும். பாதிப்பும் அதிகமாகிவிடும். நாம் வடக்கு, தெற்கு என்று பாகுபாடு பார்ப்பதில்லை. மக்களது பாதுகாப்பினை கருத்திற் கொண்டே எமது நடவடிக்கைகள் தொடர்கின்றன" என்றார். (செ-12)

## பசிலின் மனு...

பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட 5 வழக்குகளுக்கு எதிராகவே மனித உரிமைகள் மீறல் மனு ஒன்றை பசில் ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ளார்.

# வடக்கை விடுத்து திருமலையை அபிவிருத்தி செய்ய அவசியம் என்ன?

### திஸ்ஸ விதாரண கேள்வி

(கொழும்பு)

யுத்த பாதிப்புக்களை அதிகம் எதிர்கொண்ட வடக்கு மாகாணத்தை விடுத்து, கிழக்கில் திருகோணமலையை மாநகரமாக அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியம் என்னவென்று, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் மேற்குறித்தவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

திருகோணமலையை மாநகரமாக மாற்றுவதற்கு ஜப்பானுடன் தற்போது உடன்படிக்கை செய்துள்ளனர். யுத்தம் இடம்பெற்ற வடக்கு மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், அதிக பாதிப்பு ஏற்பட்ட வடக்கு பகுதியையே முதலில் அபிவிருத்தி செய்திருக்க வேண்டும். ஏன் திருகோணமலையை தேர்ந்தெடுத்துள்ளனர்?

பிரதமர் ரணில் சீனாவுக்கு புறப்படுவதற்கு முன்னர் கடற் படையின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், இலங்கை கடற்பரப்பை மட்டுமன்றி, மாலைதீவிலிருந்து மலாக்கா ஊடாக சிங்கப்பூர் வரை இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை எமது கடற்படையினர் பாதுகாக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தார். எமது கடற்பரப்பில் இடம்பெறும் கடற்கொள்ளை உள்ளிட்ட விடயங்களை கட்டுப்படுத்தவே முடியாமல் இருக்கும்போது, முழு இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பையும் பிரதமர் பொறுப்பேற்று அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாக விளங்குகின்றது. அமெரிக்காவின் கடற்படைத்தளம், திருகோணமலையில் அமைக்கப்படுவதாக வெளியான தகவல்கள் பொய்யல்ல. எமது கடற்பரப்பில் அமெரிக்காவின் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டு அவர்களது நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லவே முனைகின்றனர். இதற்கான் பொறுப்பை எமது படையினர் ஏற்க வேண்டுமாம்.

இன்று உலகம் முழுவதும் சுமார் 100 கடற்பிரதேசங்களில் அமெரிக்காவின் கடற்படை தளங்கள் அமைக்கப்பட்டு, அவர்களது கப்பல்கள் அவ்வப்போது வந்து நிறுத்தபபடும். அவர்களது பலத்தை உறுதிசெய்து ஆதிக்கம் செலுத்துவதே இதன் நோக்கம். அவர்களுக்கு சார்பாக அரசாங்கம் செயற்பட்டால் எவ்வித பிரச்சினையும் இல்லை. அவர்களை எதிர்த்தால் தாக்குதல் நடத்துவதற்காகவே இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என திஸ்ஸ விதாரண தெரிவித்தார். (செ-12)

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையில் மூவர் அடங்கிய குழுவினால் இந்த மனு சட்ட அடிப்படை இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பணமோசடி சட்டத்தின் கீழ், நிதி மோசடி விசாரணைப் பிரிவு கம்பஹா, பூகொடை, மாத்தறை மற்றும் கடுவலை நீதவான் மூலம் பி அறிக்கைகள் தாக்கல் செய்து தன்னை கைது செய்ய முயற்சித்துள்ளார்கள் என அந்த அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவில் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இந்த பி அறிக்கைகள தவறாக தாக்கல் செய்யப்பட்டவை என பசில் குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் மே மற்றும் ஜூன் மாதங்களில் இரு வழக்குகள் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ஷ இரண்டு வழக்குகளிலும் இருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இறுதி யுத்தத்...

வுடனான கேள்வி நேரம் இடம் பெற்றது. நேற்றைய தினமும் சாலாவ இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவம் குறித்தும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலும் தென்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களால் கேள்விகள் தொடுக்கப்பட்டன.

இதன்போது பிரதான எதிர்க் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கேள்வி தொடுத்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன், இறுதிக்கட்ட போரின்போது அரச படையினர் பொது மக்கள் மீது கனரக ஆயுதங்களைக் கொண்டு திட்டமிட்டு தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டினார். இதனால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டது மாத்திரமன்றி அன்று நடத்தப்பட்ட கனரக ஆயுதங்களின் வடுக்களால் இறுதிக்கட்ட போரின் போது வன்னியில் சிக்கியிருந்த தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் சிவநேசன் தெரிவித்தார். இவை தொடர்பில் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்றும் அவர் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யுத்தம் இடம்பெறும் பகுதிகளில் இடையில் சிக்கி பொதுமக்கள் பலியாவது தவிர்க்க முடியாதது. இது உலகம் முழுவதும் இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவித்தார்.

அத்தோடு இறுதிக்கட்ட போரின போது அரச படையினரால் திட்டமிடப்பட்டு தமிழ் மக்கள் மீது கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடாத்தப்படவில்லை என்று கூறியுள்ள ரணில் விக்கிரமசிங்க, கனரக ஆயுதங்களின் தாக்குதலால் இன்றும் மருத்துவ ரீதியாக வன்னியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இதுவரை தமக்கு எந்தவிதமான அறிக்கைகளும் கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனினும் இந்த முறைப்பாடு தொடர்பில் சுகாதார அதிகாரிகள் ஊடாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனுக்கு உத்தரவிடுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-12)

## குற்றச்சாட்டுக்களை...

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க காரியாலயத்தின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கொழும்பில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளித்த போது இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடும் யுத்தம் நடைபெற்ற தென்னாபிரிக்காவில் குற்றம் இழைத்தவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் முன் முன்னிலையாகி பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டனர். எனினும் இலங்கையில் அவ்வாறு நடைபெற வாய்ப்பில்லை.

ஏனெனில் இலங்கையின் பாரம்பரியம், அரசியல் கலாசாரம், மற்றும் மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் குற்றம் இழைத்தவர்கள் தாமாக முன்வந்து தமது குற்றங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மறுபக்கத்தில் யுத்தத்தினால் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கு பல்வேறுபட்ட விடயங்கள் அவசியமாக உள்ளன.

இதனடிப்படையில் காணாமல் போனோர்களின் உறவினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிவாரணங்களை வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

நீதி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து இந்த சான்றிதழை வழங்கும் நடவடிக்கையை அரசாங்கமும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க காரியலாயமும் செயற்திறன்மிக்க வகையில் முன்னெடுத்து வருகிறது.

காணாமல்போன இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் குடும்பங்கள், காணாமல்போன பொது மக்களின் குடும்பங்கள் உள்ளிட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் இந்த சான்றிதழ் உதவியாக அமையும்.

முரண்பாடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு சலுகைகளை அரசாங்கம் வழங்கும் வகையில் அடுத்த கட்டமாக மரண சான்றிதழ் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

காணாமல் போனவர்கள் தொடர்பான விடயத்தை எடுத்துக் கொள்ளும்போது, மரண சான்றிதழ் வழங்கப்படாவிடின் அவர்களின் உறவினர்கள் சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியாது என சந்திரிகா பண்டாரநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் தற்போது வழங்கப்படவுள்ள காணாமல்போனமை தொடர்பிலான சான்றிதழை, சமூக நலத் திட்டங்களின் கீழான சலுகைகளைப் பெறுவதற்கு உறவினர்கள் பயன்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (செ-5)

## சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸாரின் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 4 மணிக்கு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மக்களை கலந்து கொள்ளுமாறு நெல்லியடிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பிரியந்த தெரிவித்துள்ளார். (செ-5,60)

# சிங்கள மொழி அறிவு இல்லாத...

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அனைத்து மாணவர்களுக்கும் நான் கூறக்கூடிய முக்கிய அறிவுரை என்னவெனில் ஆங்கில மொழிக் கற்கையில் சிறிய வகுப்பில் இருந்தே கூடிய கவனஞ்செலுத்துங்கள் என்பதே. ஆங்கிலம் கற்பதால் உங்கள் தமிழ் புறக்கணிக்கப்பட்டு விடாது. மாறாக எங்கள் தமிழ் மொழி உலக ரீதியாகக் கருத்துக்களைத் தன்னுள் பெற்றெடுக்க அது உதவி புரிகின்றது. ஆகவே ஆங்கிலத்தைத் தயவு செய்து புறக்கணிக்காதீர்கள்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாண்டித்தியத்தைப் பெறுகின்ற போது நீங்கள் 50 வீதம் கற்றவர்களாக மாற்றப்பட்டு விடுவீர்கள். ஏனைய பாடங்களில் உங்களுடைய திறமை உங்களை 100 வீத நிலைக்கு உயர்த்தும்.

மிகப் பின்தங்கிய கிராமங்களில இருந்து கணிதம் மற்றும் உயிரியல் பாடங்களை மிகத் திறமையாகக் கற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான சில மாணவர்கள் அவர்களின் ஆங்கிலப் புலமைக் குறைவினால் தமது பல்கலைக்கழக கற்கை நெறிகளைத் தொடர்ந்து கற்க முடியாது பல்கலைக்கழகத்தை விட்டுவிலகி சிறுசிறு தொழில் முயற்சிகளில் இப்போது ஈடுபட்டிருப்பதாக நாம் அறிந்துள்ளோம். இது வேதனைக்குரியது.

எனவே மொழி அறிவு ஒவ்வொரு மாணவ மாணவியரினதும் மூல வேர் என்பதை நன்கு உணர்ந்து கொண்டு இம் மாணவர்கள் சிறு வயதில் இருந்தே ஆங்கிலப் பாடத்தை விரும்பிக் கற்க வேண்டும்.

அவ்வாறு இம் மாணவர்கள் விரும்பிக் கற்கக் கூடிய விதத்தில் ஆங்கிலப் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களும் இலகு நடையில் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். அதன் மூலம் வடபகுதி மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும். இலங்கையின் மற்ற மாகாணங்களுடன் ஒப்பு நோக்கும் போது எம் குழந்தைகள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவர்களாக மிளிர வேண்டும். அந் நாள் வெகு தொலைவில் இல்லை என்று நம்புகின்றேன்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். எமது இலங்கை வாழ் மக்களிடையே ஐயமும், சந்தேகமும், மனக்கிலேசமும், அவநம்பிக்கையும், ஆத்தரமும் இதுகாறும் ஏற்பட முக்கிய காரணம் தவறான புரிதலாகும். இரு மொழி பேசும் மக்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டுமானால் ஒருவர் மொழியை ஒருவர் கற்க வேண்டும். நோர்வே போய் அவர்கள் மொழியை எம்மவர் கற்கின்றார்கள், பிரான்ஸ் போய் பிரேஞ்சு மொழியைக் கற்கின்றார்கள்.

ஆனால் நாம் சிங்கள மொழியைப் புறக்கணிக்கின்றோம். நான் சிங்களம் படிக்கத் தொடங்கியது 1955-ம் ஆண்டில். 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்ததும் ஆத்திரத்தில் சிங்கள மொழியைப் படிப்பதை நிறுத்திக் கொண்டேன். இன்று குறையுடன் தான் சிங்கள ஊடகங்களுக்கு சிங்களத்தில் எமது பக்க அரசியல் குறைபாடுகளை நான கூறி வருகின்றேன்.

நான் அன்று தொடங்கிய சிங்களப் படிப்பைத் தொடர்ந்து வந்திருந்தேனானால் எந்தச் சிங்கள அரசியல்வாதிக்கும் அவரின் மொழியிலேயே சுடச் சுடப் பதில் அளித்திருக்கலாம். இன்று சிங்கள மாணவர்கள் கட்டாயமாகத் தமிழ் படிக்கத் தொடங்கியுள்ளார்கள். விரைவில் தமிழ்ப் பேசும் சிங்கள அலுவலர்கள் வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படப் போகின்றார்கள்.

நாங்கள் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். சிங்கள அறிவு இல்லாதவர்கள் வருங்காலத்தில் புறக்கணிக்கப்படக்கூடும். ஆகவே அரசியலை மறந்து சிங்களமொழியாற்றலையும் விருத்தி செய்யுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9,7)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி
(பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
SCHOLARSHIPS AVAILABLE
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (C-4849)
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


# ரவிக்கு...

வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இன்று வியாழக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் நேற்று பகல் ஒரு மணிக்கு ஆரம்பமான போது, ஒலிக்கருவி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே, நேற்று இடம் பெறவிருந்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிரான பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது என்று ஜே.வி.பி தீர்மானித்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# தேவையற்ற குழப்பங்கள்...

உருவாகலாம். ஆகையால் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என மாகாண சபை உறுப்பினர்களிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும எதிர்க் கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் எச்சரிக்கைய்யை அடுத்து வடக்கு அமைச்சர் ஒருவர் மீது எதிர்வரும் பதின்நான்காம் திகதி கொண்டுவரப்பட இருந்த நம்பிக்கையில்லா பிரேரணையை குறித்த தரப்பு கைவிட தீர்மானித்து உள்ளதாகவும் அறிய முடிகின்றது.

அண்மையில் நிகழ்வொன்றுக்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பன் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய வடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாகாண சபை உறுப்பினர்கள் சிலரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். எந்த தரப்பிலும் ஊழல் இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கு மாகாண சபையில் ஊழல் இடம் பெற்று இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கான ஆதாரங்களை எம்மிடம் கையளித்தால் உரிய நடவடிக்கையை எம்மால் எடுக்க முடியும்.

அதனை விடுத்து மாகாண சபையின் அமர்வுகளில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுவது சரியான அணுகுமுறை அல்ல.

தற்போது சர்வதேச பங்களிப்புடன் இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் எவ்வளவோ விடயங்கள் செய்ய வேண்டி உள்ளன. அவற்றுக்கு முன்னுரிமை கொடுக்காமல் தேவையற்ற விதத்தில் மாகாண சபையில் குழப்பங்களை விளைவிப்பதில் முன்னுரிமை காட்ட கூடாது.

மக்களுக்கு தேவையானவற்றை செய்யுங்கள். குழப்பங்கள் இருந்தால் கட்சியும் கட்சி தலைமைகளும் நடவடிக்கை எடுக்கும் என இரா.சம்பந்தன் அறிவுறுத்தி உள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு திட்டமிட்ட ஒரு குழு ஒன்று அதற்கான ஆதரவுகளை ஏனைய உறுப்பினர்களிடையே திரட்டும் நடவடிக்கைகளிலும் தீவிரமாக முயற்சித்து வந்ததோடு, அது தொடர்பிலான பேரம் பேசலையும் முன்னெடுத்திருந்தது.

இதனை முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வொன்றில், வடக்கு மாகாண முதலமைச்சர் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருந்தார். இதனால் அமைச்சர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை பிசுபிசுத்து போக, அதன் தொடர்ச்சியாக கட்சியின் தலைவரும் குறித்த சம்பவம் தொடர்பில் கவனம் செலுத்தி குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருடைய கடும் எதிர்ப்பையும் மீறி எதிர்வரும் பதின்நான்காம் திகதி அமைச்சர் ஒருவர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட மாட்டாது என அறியமுடிகிறது. (செ-4)


எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-4883)
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)



அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை
காலி நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடமைபுரிய
* அலுவலக உத்தியோகத்தர்கள்
* ஊழியர்கள் தேவை
ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய தமது விண்ணப்பத்தை
NO.3, Kelan kaduwa Place, Colombo 06
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: தங்குமிட வசதி வழங்கப்படும்.
(C-4818)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# அனைவருக்கும் சமமான...

சுற்றாடல் அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு கருத்துக்களை தெரிவித்த சூழல் பாதுகாப்பு நிதியத்தின் சத்தியவேல் விஸ்வலிங்கம் அனுமதி பத்திரமின்றி யானைக் குட்டியொன்றை வைத்திருந்தமை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் நீதிபதி திலின கமகேவிட்கு பிணை வழங்கிய பொதுநுகேகொட நீதவான் நீதிமன்ற நீதிபதி வழமைக்கு மாறாக செயல்பட்ட தாக குற்றம் சாட்டினார்.

பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத நிலையில் சந்தேக நபரான முன்னாள் நீதிபதி கமகேவிட்கு விடுதலையாகி செல்ல நுகேகொட நீதவான் நீதிமன்ற நீதிபதி அனுமதியளித்தமை கண்டிக்கத்தக்கது என்று கூறிய அவர் இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் பொது மக்கள் நீதிமன்றங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக எச்சரித்தார்.

இதேவேளையில், நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகளை மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி வழக்கறிஞர்கள் சிலர் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிமன்றம் முன் அமைதி போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

அங்கு கருத்துக்களை தெரிவித்த வழக்கறிஞர் பி.டி.பெரேரா, நீதிபதிகள் மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி நீதிமன்றங்களுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்வதை கண்டிப்பதாக தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது, நீதிச் சேவை ஆணைக் குழு முன் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (செ-12)


V2 TRAVELS குறைந்த கட்டணத்தில் அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் / வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை



• விமான ஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)
• விசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)
• இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services)
• பயண திகதியினை மாற்றுதல் (Date change)
• பயணக்காப்புறுதி (Travel Insurance)
UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான Visit visa/Spouse Visa/Tourist visa/Student visa/ Business visa போன்றவற்றிற்கான ஆலோசனைகள், ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்ட (REFUSAL) விசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்து VISA பெற்றுக்கொடுத்தல்
ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் எமது அனைத்து கிளைகளும் இயங்கும்
எமது கிளைகள் → யாழ்ப்பாணம் 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். | கிளிநொச்சி A9 வீதி, கிளிநொச்சி (பழைய ஆஸ்பத்திரிக்கு முன்னால்) | நெல்லியடி முடக்காட்டு சந்தி, நெல்லியடி. | வல்வெட்டித்துறை யாழ் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
0768226243
முகவர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்
குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை.
மீண்டும் மீண்டும் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலை சலுகைகள்
உங்கள் வீட்டிலிருந்து உங்கள் உறவுகளின் வீட்டிற்கு
■ மேலதிக கட்டணமின்றி உங்கள் இடங்களிலேயே வந்து பொதிகளை பெற்றுக்கொள்கிறோம். இதன்மூலம் வாடிக்கையாளர் போக்குவரத்துச் செலவையும் வீண் அலைச்சலையும் தவிர்த்துக்கொள்ளலாம்
■ வாரத்தில் 7 நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் மாலை 7 மணிவரைக்கும் உங்கள் வீடுகளில் வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.
■ 3-7 வேலை நாட்களில் உலகில் எந்தநாட்டிலும் பொதிகள் தாமதமின்றி ஒப்படைக்கப்படும்.



(C-4848)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-15

பகுதி-II

## தமிழ்க் கல்விக் கழகம்

நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் பந்தியை அவதானமாக வாசிக்க.

தேயிலை ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தேழாம் ஆண்டு ஆங்கிலேயரால் நமது நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. கண்டிக்கு அண்மையிலுள்ள " லூக்கந்துர" என்னுமிடத்திலேயே முதன்முதலாகத் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டது.

நமது நாட்டின் மலைநாட்டுப் பகுதிகளிலும் ஒருசில தாழ்நிலப் பிரதேசங்களிலும் தேயிலை பயிரிடப்படுகின்றது. தேயிலை பயிரிடப்படுகின்ற இடங்களை தோட்டங்கள் என அழைப்பார்கள்.

◆ கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. இலங்கையில் தேயிலை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?..........
2. தேயிலை பயிரிடப்படுகின்ற இடங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?..........
3. பந்தியில் உள்ள அடைமொழி ஒன்று தருக..........
4. 'நாடு' என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல் தருக..........
5. இப்பந்தியில் உள்ள சினைப்பெயர் ஒன்றை எழுதுக..........
6. இப்பந்தியில் உள்ள லகர, ழகர சொற்கள் ஒவ்வொன்று வீதம் எழுதுக..........

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

அ) 01.......... நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்தான்.
(தொழிலாளி/ தொலிலாளி)
02.விளையாட்டு வீரர்களால்.......... எடுத்துக் கொள்ளப்படும்.
(உருதிமொழி/உறுதிமொழி)
03. யானை மிகுந்த .......... உடைய மிருகம்.
(பலம்/பழம்)

ஆ) ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட பல பொருளை குறிக்கப் பயன்படும் ஒரு சொல் அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரை | கலை | அடி | முடி | திங்கள் | பதி |


01.வித்தை, ஆண்மான், கலைத்தல்..........
02.மாதம், வாரத்தில் ஒரு நாள், சந்திரன்..........
03.மகுடம், முடித்தல், குடுமி..........

03) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக?
01.May I go home?..........
02.I will come tomorrow..........

04)பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?
பிறந்தநாள் வாழ்த்துக்கள்..........

05) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?





06)பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக?
உங்கள் வயது எத்தனை?..........

07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக?
மல்லி எக்க யமு..........

08)கீழுள்ள உவமைத் தொடர்களுக்கு பொருத்தமான கருத்தை தெரிவு செய்து எழுதுக.
01.நகமும் சதையும் போல.......... (ஒற்றுமை/வேற்றுமை)
02.தாயைக் கண்ட சேய் போல.......... (துயரம்/மகிழ்ச்சி)
03.ஆகாயத்தில் கோட்டை கட்டியது.......... (நிரந்தரமானது/நிரந்தரமற்றது)

◆9 தொடக்கம் 11 வரையான வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக?

09)மாலையில் வந்து முகில்கள் கூட.
.......................................................................
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது

10) அருமை மிக்க நண்பனுக்குக்
கடிதம் எழுதவே
.......................................................................
எழுத்துக் கொள்ளுவேன்

11) கல்லைச் சிற்பி கண்டனன்;
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
கல்லை மாற்றி அமைத்தனன்;
.......................................................................

12) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுதுக.

1.................................................................................................................... பெய்ததால் குளம் நிரம்பியது.(மழை, மலை)

2.நான் ........................................................................................................................ மாதத்தில் பிறந்தேன். (ஆணி, ஆனி)

3. குரங்கின்..................................................................................................................................... நீளமானது (வாள், வால்)

◆13 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

13) நாங்கள் (யாணைகள், யானைகள்) சரணாலயத்திற்குச் சென்றோம்.

14) நான் கண்டி (நகருக்குச், நகறுக்குச்) சென்றேன்.

15) எடிசன் கண்டுபிடித்த மின்குமிழை (இறவு, இரவு) நேரங்களில் ஒளியேற்றச் செய்தார்.

16)உலகில் உள்ள நாடுகளுள் எமது நாடு இயற்கை வளங்கள் கொண்ட ஒரு அழகான நாடாகும். "எனது நாடு இயற்கை வளம் கொண்டது" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகள் எழுத்துக் கூட்டல் சரியாக இருக்க வேண்டும்)

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

◆தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

17) கீழ்வரும் எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களை எழுதுக.

2510, 2560, 2610,......................................................................, ......................................................................

18)255, 1352, 720, 1008 ஆகிய எண்களை இறங்கு வரிசையில் எழுதும் போது முதல் வரும் எண் எது?.........................................


19) 3 kg சீனியின் விலை ரூபா. 150/- எனின் 2500g சீனியின் விலை எவ்வளவு?..........................................................................

20) விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களை முறையே எழுதுக. (1.....................................................) (2..................................................)

21) 3526 என்ற எண்ணில்

1) 5 இன் இடப்பெறுமானம் யாது?..........................................................................................................................


2) 5 இன் எண் பெறுமானம் யாது?..........................................................................................................................

22)  பொத்தான்கள் சில மூன்று அடைப்புக்களில் ஒரு குறித்த கோலத்திற்கு ஏற்ப அடுக்கப்பட்டுள்ளன. அக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்பினுள் பொத்தான்களை வைக்க வேண்டிய முறையைக் காண்க. (.....................................................................................)


23) ஒரு பாடசாலையில் தரம் 4A இல் உள்ள 3 மாணவர்களும் தரம் 4B யில் உள்ள 6 மாணவர்களும் பாடசாலைக்கு வரவில்லை. பாடசாலைக்கு வந்த 4A பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை 32 ஆகும். பாடசாலைக்கு வந்த 4B மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆகும். எனவே இப் பாடசாலையில் தரம் 4 இலுள்ள மாணவர்கள் தொகை யாது?.........................................................................................

24) ஒரு வரிசையில் 42 நபர்கள் நிற்கலாம். இதன்படி 1386 நபர்கள் நிற்பதற்கு எத்தனை வரிசைகள் தேவைப்படும்?...........................

25)ஒரு தொட்டியில் நிரப்பத்தக்க நீரின் கனவளவு 8750 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் தற்போது 3695 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் வேைப்படும் நீரின் கனவளவு யாது? ...........................................................................................


26) 

ஆறு நகரங்களைத் தொடுக்கும் ஒரு பாதையின் படம் உருவில் காணப்படுகின்றது. ஒருவர் நகரம் A யிலிருந்து தொடங்கி B,C,D,E,F ஆகிய நகரங்களினூடாகப் பாதை வழியே சென்று மறுபடியும் A யிற்கு வருகின்றார். அவர் சென்ற மொத்தத் தூரம் யாது?................................................................

27) 

கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் B யின் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக?

28) பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்குச் சமனாகும்?....................................................



29) ஒரு வியாபாரியிடம் 45 குடைகளும் 35 தொப்பிகளும் இருந்தன. ஒரு வியாழக்கிழமை 32 குடைகள் விற்கப்பட்டன. அடுத்த நாள் 10 தொப்பிகள் விற்கப்பட்டன. இப்போது அவ் வியாபாரியிடம் உள்ள குடைகளினதும் தொப்பிகளினதும் கூட்டுத் தொகை யாது?..................

30) 3.5m நீளமான கம்பியொன்றை 70cm நீளமான துண்டுகளாக வெட்டினால் எத்தனை துண்டுகளாக வெட்ட முடியும்?..................

❖ 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

31) பின்வரும் தாவரங்களில் நீண்ட நாள் வளருகின்ற தாவரம் எது?
1.கத்தரி 2.தக்காளி 3. கித்துள் 4. பப்பாசி

32) நீரில் கரையாத பொருள்
1.உப்பு 2. சீனி 3. மெழுகு 4. மை

33) நுளம்பின் மூலம் பரவும் நோய் அல்லாதது
1.டெங்கு 2. மலேரியா 3. வாந்திபேதி 4. யானைக்கால்

34) வடமாகாணத்தை சேர்ந்த ஒரு மாவட்டம்
1. வவுனியா 2. மாத்தறை 3. கண்டி 4. திருகோணமலை

35) கறையான் அமைத்த புற்றைத் தனது வீடாகப் பயன்படுத்துவது
1.எலி 2. கறையான் 3. பாம்பு 4. முயல்

36) சீவுளி எனும் ஆயுதத்தை பயன்படுத்துபவர்
1. மேசன் 2. தச்சன் 3. கொல்லன் 4.சிகை அலங்கரிப்போர்

37) நல்ல நிழலைத் தரக்கூடிய தாவரம் எது?
1. வேம்பு 2. பப்பாசி 3. கொய்யா 4.வாழை

38)பொருட்களுக்கு சர்வதேச ரீதியில் வழங்கப்படும் தரச்சான்றிதழின் குறியீடு
1. SLS 2.ISBN 3. ISO 4. PHI

39) கொள்ளை நோயைப் பரப்புவது
1. பன்றி 2. மணி இலையான் 3. எலி 4. வீட்டு ஈ

40) சிக்குன் குன்யா நோய் பரவுவது
1. நுளம்பினால் 2. நாயினால் 3. குரங்கினால் 4. வீட்டு ஈயினால்

41) பின்வரும் பிராணிகளில் மிக வேகமாக ஓடக்கூடியது
1.மான் 2. பன்றி 3. மாடு 4.ஆடு

42) களியினால் கூடமைக்கும் பிராணி எது?
1.மீன்கொத்தி 2.மரங்கொத்தி 3. மழைப்புள் 4. வீட்டுக்குருவி

43)நாம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் அல்லாதது?
1.காலாவதியாகும் திகதி 2. பொருளின் தரம்
3. பொருளின் பெறுமதி 4. பொருள் கொள்வனவு செய்யும் கடை

44) பூமிக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?
1. செவ்வாய் 2. வியாழன் 3. வெள்ளி 4. புதன்


45)இரவில் மலரும் பூக்களில் ஒன்று
1.தாமரை 2. கடுபுல் 3. நான்குமணிப்பூ 4. அலரி

46) தாவர இலைகளின் கீழ் முட்டையிடும் பூச்சி
1.கரப்பான் பூச்சி 2. வெட்டுக்கிளி 3. குளவி 4. வண்ணத்துப்பூச்சி

47) மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம்
1. கொழும்பு 2. களுத்துறை 3. இரத்தினபுரி 4. கண்டி

48) வேறுபட்ட வடிவத்தைக் கொண்ட தாவர இலை எது?
1. ஈரப்பலா 2. பப்பாசி 3. பலா 4.வெண்டி

49) பின்வரும் உருக்களில் மீன்கொத்தி எது?



1)


2)


3)


4)

50) இலங்கைக்குக் கிழக்கில் அமைந்திருப்பது
1. மலேசியா 2. இந்தியா 3. ஆபிரிக்கா 4.இந்து சமுத்திரம்


51) 
இவ் உபகரணம் எந்தத் தொழிலுடன் தொடர்புடையது
1. ஆடைத்தொழிலில் 2. மரவேலைத்தொழிலில் 3. கமத்தொழிலில் 4. நெசவுத்தொழிலில்

52)நன்னீர் மீன்களில் ஒன்று
1.திலாப்பியா 2.திருக்கை 3. தோறா 4. சுறா

53) குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்
1. கிழக்கு மாகாணம் 2. வடமேல் மாகாணம் 3. மேல் மாகாணம் 4. வட மத்திய மாகாணம்

54) நேரடியாக வித்துக்களை பாத்திகளில் இடும் பயிர் வகைகளில் ஒன்று
1. மிளகாய் 2. தக்காளி 3. கத்தரி 4. வெண்டி

55) உடலுக்கு சக்தி தரும் உணவுகளில் அடங்குவது
1. சோறு 2. இறைச்சி 3. கரட் 4. மீன்

56) 
இவ் வீதிக் குறியீடு குறிப்பது
1. முன்னால் அகன்ற பாதை உள்ளது 2.முன்னால் ஒடுங்கிய பாதை உள்ளது
3. முன்னால் பாலம் உள்ளது 4. முன்னால் பாதை வழுக்கக்கூடியது

57) இக் குறியீடு உணர்த்துவது
1.அதிவேகப் பாதை என்பதை 2. மின் உலர்த்தி என்பதை
3. இப்பக்கம் மேலே என்பதை 4. மேல் மாடிக்கு செல்லும் வழி என்பதை

58) 
உருவில் உள்ள பறவை எது?
1.கொக்கு 2. நாரை 3. புளுனி 4. நீர்க்காகம்

59) கருவாடு உண்பதால் உடலுக்கு கிடைக்கும் போசணை பதார்த்தம் யாது?
1.காபோவைதரேற்று 2. புரதம் 3. இரும்பு 4. அயடீன்

60) நொதித்தல் முறையைக் கண்டு பிடித்தவர்
1. லூயி பாஸ்ரர் 2. எடிசன்
3. மார்க்கோணி 4. நியூட்டன்

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வெள்ளிக்கிழமை
(10.06.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)
★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)
★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)
★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)
★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)
★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)